விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 தை 25 ரபி. ஆகி 23 இதழ் 360

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 7—2—83

G.C.E A/L 83
தூயபிரயோக கணிதம்
புதிய பகல் நேரவகுப்பு
(Mon – Fri)
ஆரம்பம்: 7 - 2 - 83
7-00 — 8-00 A.M அட்சரகணிதம்
2-30 P. M. தொடர்பு வேகம்
3-30 P M. திரிகோணகணிதம்
ஆசிரியர்: RAVIMOHAN
மணியம்ஸ் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
(ஸ்ரீதர் சினிமா — நாகவிகாரை இடையில்) 6082

## இந்திரா காங்கிரஸ் முன்னணியில்

புதுடில்லி, பெப். 6

புதுடில்லி உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின் பிரகாரம் இந்திரா காங்கிரஸ் முன்னணியில் நிற்கின்றது.

புதுடில்லி பெருநகர் கவுன்ஸில் தேர்தலில் அறிவிக்கப்பட்ட 26 தொகுதிகளுக்கான முடிவுகளில் இந்திரா காங்கிரஸ் 19 இடங்களும், இதர கட்சிகளின் முன்னணிக்கு 6 இடங்களும், ஜனதா கட்சிக்கு ஒரு இடமும் கிடைத்துள்ளது.

புதுடில்லி மாநகராட்சி கவுன்ஸில் தேர்தல்களில் அறிவிக்கப்பட்ட 34 தொகுதிகளுக்கான முடிவுகளில் இந்திரா காங்கிரஸுக்கு 19 இடங்களும், இதர கட்சிகளின் கூட்டு முன்னணிக்கு 14 இடங்களும், ஜனதா கட்சிக்கு ஒரு இடமும் கிடைத்துள்ளது. (வெ)

# ‘நாட்டுமக்கள் அனைவரும் சமம் தேச முன்னேற்றமே எனது குறிக்கோள்!’’

## எண்கோண மண்டபத்திலிருந்து ஜனாதிபதி செய்தி

### கண்டியில் சரித்திரம் காணாத ஜனத்திரள்

(கண்டியிலிருந்து இ. கந்தசாமி)

‘‘சாதி, மத, குல, அரசியல் பேதங்களின்றி முழுத் தேசத்தின் மேம்பாட்டிற்காகப் பாடுபடப்போகிறேன். இந்நாட்டு மக்கள் அனைவரையும் சரி சமமாகக் கருதி சட்டப்படி கடமைகளைச்செய்யவுள்ளேன். நீதி, நியாயம், தார்மீக முறையில் ஆட்சிசெலுத்துவதே எனது குறிக்கோளாகும்.’’

இவ்வாறு ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா கண்டி தலதா மாளிகை எண்கோணமண்டபத்திலிருந்து நேற்று நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அச்செய்தியில் தொடர்ந்து தெரிவித்துள்ளதாவது!

**மக்களால் தெரிவானேன்**

‘‘1977ம் ஆண்டு ஜூன் 28ம் திகதி இந்நாட்டின் பிரதம மந்திரியாக தெரிவுசெய்யப்பட்ட நான், 1978 பெப்ரவரி 5ம் திகதி முதலாவது நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனாதிபதியாக பதவியேற்றேன். இன்று மக்களால் தெரிவுசெய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதியாகவும், அரசாங்கத் தலைவனாகவும் உங்கள் முன்னிலையில் உரையாற்றுகிறேன்.

**மக்களுக்கே அதிகாரம்**

‘‘1815ம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதியாக கண்டி இணைக்கப்பட்டது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கொடி இந்த எண்கோண மண்டபத்தில் பறக்கவிடப்பட்டது. 1948ம் ஆண்டு இந்த நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தது 1972ல் அது மக்கள் குடியரசானது. தற்போது ஜனாதிபதியை தெரிவுசெய்யும் அதிகாரம் மக்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

‘‘நாட்டிலுள்ள 81 லட்சம் வாக்காளர்களில் பெரும்பான்மையினர் என்னை ஜனாதிபதியாகவும், அரசாங்கத் தலைவ

[8ம் பக்கம் பார்க்க]

## புனித பிரதேசமாகப் பிரகடனம் செய்யப்படும்

(கண்டி)

தலதா மாளிகையையும், அதனை உள்ளடக்கிய பகுதிகளையும் புனித பிரதேசமாகப் பிரகடனம் செய்ய தீர்மானித்துள்ளேன்’’.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா நேற்று இம் மாளிகையின் எண்கோணமண்டபத்திலிருந்து நாட்டுமக்களுக்கு விடுத்த செய்தியின் போது மேற்கண்ட உறுதியை தெரிவித்துள்ளார். (வெ)

## ஜனாதிபதிக்கு பெரும் வரவேற்பு

(கண்டி)

ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, புஸ்பானந்த பாலிகா மகாவித்தியாலயத்தில் நடைபெறும் கைத்தொழில் விவசாய பொருட்காட்சியை நேற்றுக்காலை பார்வையிட்டார்.

இதன் பின்னர் சிறி தலதா மாளிகையை வந்தடைந்தார். பிரதான வாசலில் ஜனாதிபதி வரவேற்கப்பட்டு அரசாங்க அதிபர், கண்டி முதல்வர், கண்டிமாநகரசபைஉறுப்பினர்கள் எம் பிக்கள் அறிமுகம் செய்துவைக்கப்பட்டார்கள்.

மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகள் தலைமையில் நடைபெற்ற பிரித் ஓதும்வைபவத்தில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

இதனைத்தொடர்ந்து எண்கோண மண்டபத்திலிருந்து ஜனாதிபதி உரைநிகழ்த்தினார்.

பாடசாலை மாணவர்களின் மரியாதைஅணிவகுப்பை ஜனாதிபதி பெற்றுக்கொண்டார்.

கண்டி மாநகரசபையினால் ஒழுங்கு செய்யப்பட்ட பெரஹராவையும் ஜனாதிபதி பார்வையிட்டார். (இ-க)

## பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்: இன்று இறுதி முடிவு!

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ். பல்கலைக்கழக மாணவரின் உண்ணாவிரதப்போராட்டம் தொடர்ந்து நடைபெறுமா? அல்லது அவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு வகுப்புகளுக்குச் செல்வார்களா? என்பதுபற்றி இன்று முடிவுதெரியும் என தெரியவருகிறது.

நேற்றுக்காலை யாழ். பல்கலைக்கழக வேந்தரும் முன்னாள் நீதியரசருமான திரு வி. மாணிக்கவாசகர், உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் ஆகிய இருவரும், யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைத்தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசாவை அழைத்து உண்ணாவிரதப் போராட்டம் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடாத்தினர்.

இப்பேச்சுவார்த்தை யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல சட்டத்தரணி ஒருவரின் இல்லத்தில் நடைபெற்றது.

**இருவார அவகாசம்**

‘‘பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து வைத்திருக்கும் யாழ் பல்கலைக்கழக மாணவர் திரு. ராஜாஜி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி தொழில்நுட்ப நிறுவன மாணவர் திரு. ஜெயப்பிரகாஷ் ஆகிய இருவரையும் விடுதலைசெய்வதற்கு இருவார அவகாசம் தரும்படியும், உண்ணாவிரதம் இருக்கும் மாணவர்களை உண்ணாவிரதத்தைக் கைவிட்டு விரிவுரைகளுக்குத் திரும்புமாறும், உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் இப்பேச்சுவார்த்தையின்போது கேட்டுக்கொண்டார்

மற்றும் பாடசாலை மாணவர் திரு. மயில்வாகனம் விடுதலை குறித்தும் தாம் கருத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

## மைசூர்பருப்பு விலை குறைவு

(கொழும்பு)

மைசூர் பருப்பின் விலை ஒரு கிலோவிற்கு 17 ரூபா 50 சதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதன் முன்னைய விலை ஒரு கிலோவுக்கு 20 ரூபா 25 சதமாக இருந்தது:

கூட்டுறவுச் சங்கங்களுக்கு இன்று தொடக்கம் குறைக்கப்பட்ட விலையில் மைசூர் பருப்பு விற்கப்படும். (வெ)

## அரியாலையில் சம்பவம் பஸ்விபத்து 25 பேர் காயம்!

[யாழ்ப்பாணம்]

இரு இ. போ. ச. பஸ்கள் மோதிக்கொண்டதில் சுமார் 25 பேர் காயமடைந்தனர்.

ஒரு பஸ் பலத்த சேதமடைந்ததுடன், அதன் சாரதியும் படுகாயங்களுக்குள்ளானார்.

நேற்றுப் பகல் 11-30க்கு அரியாலையில் இவ்விபத்து நிகழ்ந்தது

(8ம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கியுடன் நடமாடிய இரு இளைஞர்கள் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்

### கோண்டாவில் விழிப்புக்குழு ‘சாதனை!’

(யாழ்ப்பாணம்)

சந்தேகத்துக்கிடமான முறையில் துப்பாக்கியுடன் நடமாடிய இரு இளைஞர்களை கோண்டாவில் மேற்கு விழிப்புக் குழுவினர் மடக்கிப்பிடித்து சுன்னாகம் பொலிசில் ஒப்படைத்தனர்.

நேற்று அதிகாலை 2-30-க்கு இச்சம்பவம் நடைபெற்றது.

அனலைதீவைச் சேர்ந்த அமிர்தநாதர் கணேசலிங்கம் [22 வயது], நெடுந்தீவைச் சேர்ந்த கந்தையா புண்ணியலிங்கம் (25 வயது) ஆகிய இரு இளைஞர்களுமே விழிப்புக் குழுவினரிடம் அகப்பட்டுக் கொண்டவராவர்.

தாவடிச் சந்தியில் வைத்து இருவரையும் பிடித்தனர். இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ‘ஷொட்கண்’ ‘ரவை’கள் இல்லாத நிலையில் இருந்

(8-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

3 அறை வீடு சகல வசதிகளுடன் யாழ். பல்கலைக்கழகத்திற்கு அருகாமையில் விற்பனைக்குண்டு. சி. புஷ்பநாதன், 154/8 B, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம். 6046

நுணுவில் சந்தியில் பிரதான வீதிக்கு அருகாமையில் வீடு கட்ட உகந்த 7 பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; த. மயில்வாகனம், (யாழ்ப்பாணக் கல்லூரி அருகாமை) வட்டுக்கோட்டை மேற்கு, வட்டுக்கோட்டை. 6078

2 குளிர்சாதனப் பெட்டிகள் (1) Deep freizer (1) Fridge ரேடியோ நஸ்னல் Two in one 60 W 5350 F உடனடியாக விற்பனைக்குண்டு. திங்கள் 2 மணியில் இருந்து 6 மணி வரை 38, யாழ் வீதியில் பார்வையிடலாம். 6106

24 ஸ்ரீ 4650 நம்பர் இஸ்சூஸ் லொறி விற்பனைக்கு உண்டு. (பாமிலோன்) தொடர்பு கொள்ளவும். A. இரத்தினவேல் இன்பருட்டி, அல்வாய். (செல்வக்கண்ணன் லொறி.) 6107

சிறந்தரக இலுப்பை அரப்பு விற்பனைக்குண்டு. மின்வைற், யாழ்ப்பாணம். 6090

### பயிற்சி

3 மாத எலக்ரிக்கல் வயறிங் பயிற்சி 10-02-1983-ல் ஆரம்பமாகின்றது. Institute of Engineering Technology. 11B, Momsac Building, Stanley Road, Jaffna. 6108

றேடியோ - டெலிவிஷன், ஏயர் கொண்டிசனிங், எலக்றிக்கல் வயறிங், எலக்றிக்கல் றீவைண்டிங், மோட்டர்மெக்கானிசம், வெல்டிங் பயிற்சிகள் ஆரம்பம் 09-02-83 விபரம் நேரில். (The School of Computer Studies) 52/1, கனகரத்தினம் கட்டிடம் (வீனஸ் மேல் மாடி) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 6035

### விற்பனைக்கு

31 ஸ்ரீ 2949 இலக்கங்கொண்ட, எஞ்சின் முழுவதும் புதிய பாகங்கள் கொண்டு மறு சீரமைக்கப்பட்ட Morris Oxford Diesel கார் விற்பனைக்கு உண்டு. பார்வையிடும் இடம் V. ஞானகுரு, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர். ஊரிக்காடு, வல்வெட்டித்துறை. 6051

### தேவை

16க்கும் 22 வயதுக்கும் இடைப்பட்ட பயிலுநர்கள், பயிற்சியாளர்கள் ஆகியோருக்கான வெற்றிடங்கள் உண்டு. விண்ணப்பத்துடனும் சான்றிதழ்களுடனும் 9-2-83 நேரில் வரவும். எல்பிஹெம் வாளித்தொழிற்சாலை, மாவிட்டபுரம், தெல்லிப்பழை. 6087

தொகையாக பட்டி வேர் தேவை. நல்ல காய்ந்த வேருக்கு கிலோ ரூ 8/- உடன் பிடுங்கிய வேருக்கு கிலோ ரூ 3/- ஆக வாங்கிக்கொள்கிறோம். P. M. நாகரட்ணம் செட்டியார், 15/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 22567. (6088)

வெளிக்கள விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. மருந்து வகைகள், விவசாய இரசாயனப் பொருட்கள் மற்றும் எரிபொருட்கள் விற்பனை செய்வதற்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை. அனுபவத்துடன் பிணைப்பணம் செலுத்தக் கூடியவர் மட்டுமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரி கிளிநொச்சியில் தங்கியிருக்க கோரப்படுவர் சம்பளத்துடன் கவர்ச்சியான கமிஷன் வழங்கப்படும். விண்ணப்பிக்க ஒட்டோஸ் லிமிட், யாழ்ப்பாணம். 6109

நல்ல நிலையிலுள்ள EN தொடர் மொறிஸ் மைனர் அல்லது A 35 உடன் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ஆர். ஸ்ரீராமன் (நல்லூர் சிவஞானப்பிள்ளையார் கோவில் பரிபாலகர்) 14, ஆடியபாத றோட், நல்லூர். 6110


யாழ்ப்பாண கிழங்கு பயிரிடும் விவசாயிகளுக்கு

## ஓர் அறிவுரை

உங்களுடைய கிழங்குகளை சந்தைப்படுத்துவதற்கு கயிற்றுச்சாக்குகளில் போட்டு சந்தைப்படுத்தவும். பிறிமா மாசாக்குகளில் காற்றோட்டம் இல்லாதபடியால் உங்களுடைய கிழங்குகள் அழுகிப்போகும் வாய்ப்புண்டு. ஆதலால் மீண்டும் மீண்டும் அறிவுரையாக சொல்கிறோம். உங்களுடைய கிழங்குகளை சந்தைப்படுத்தும்போது கயிற்றுச்சாக்குகளில் போட்டு சந்தைப்படுத்தவும்.

**N. A. Varnakulasingam & Sons**

173, KEYZER STREET, COLOMBO 11.

(6111)



## இதோ வந்துவிட்டது!

நீங்கள் நீண்ட காலம் எதிர்பார்த்திருந்த

**C D 200** நீலம் — சிவப்பு வர்ணங்களில் கிடைக்கும்

விலை ரூபா 29 000/-

## ஏ பவர் அன் கொம்பனி லிமிட்.

A. BAUR & COMPANY LTD

5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

குறித்த கையிருப்பே உண்டு.

ஏமாற்றத்தை தவிர்க்க முந்துங்கள்

(6104)


## கடன் கவலையால் இளைஞன் தற்கொலை

[கிளிநொச்சி]

கடன்தொல்லையால் அவஸ்தைப்பட்டுவந்த 24 வயது இளம் விவசாயி வாழ்க்கையில் விரக்தி அடைந்து கிருமிநாசினியை அருந்தித் தற்கொலைசெய்து கொண்டார். உருத்திரபுரம் சிவநகரைச் சேர்ந்த கதிரவேலு தவராசா என்பவரே மரணமானவராவார்.

இம் மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸ் கான்ஸ்டபிள் ஜனாப் ஆர். ரி. பரீத் ஆஜர்செய்தார். மரணமானவரின் தந்தை கதிரவேலுவும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து மரணவிசாரணை அதிகாரி யோகலிங்கம் தற்கொலை மரணம் எனத் தீர்ப்புவழங்கினார். (அ)

## "சி.பா. தமிழர் ஒருவரை எம்.பி.யாக நியமிக்கவும்"

(அரியாலை)

சிறுபான்மைத் தமிழர் ஒருவரை இலங்கைப் பாராளமன்றத்துக்குப் பிரதிநிதியாக நியமனம் செய்யும்படி ஜனாதிபதியைக் கோருவதென்றும், இதற்கான ஆதரவை வடபகுதியிலுள்ள சிறுபான்மைத்தமிழர்களின் சமூக இயக்கங்களிடையே திரட்டுவதென்றும் யாழ்ப்பாணம் சன்மார்க்க வாலிபர்சங்க மண்டபத்தில்நடைபெற்ற சமூக இயக்கங்களின் பிரதிநிதிகள் மகாநாட்டில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. திரு. ஆ. மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில், வடபகுதியைச் சேர்ந்தபல சமூக இயக்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினர். (சு)

## ஒரு நூல் ஐந்து இடங்களில் வெளியீடு

[சுழிபுரம்]

அபிராமியந்தாதி ஐந்தாவது பாடல் ஆய்வுரை நூல் வெளியீடு தை அமாவாசைத் தினமான எதிர்வரும் சனிக்கிழமை ஐந்து இடங்களில் வெளியிடப்படவுள்ளது. கொழும்பு, நல்லூர், சங்கானை வழக்கம்பரை, சுழிபுரம்-கம்பனை ஆகிய இடங்களில் இவ்வெளியீடு நடைபெறும்.

வழக்கம்பரைஅம்மன் கோவில் விசேட வழிபாடும்' நூறு பாடல்கள் ஓதலும் நடைபெற்ற பின்னர், சங்கீத பூஷணம் திருமதி ந. இராசரத்தினம் நூலை வெளியிட்டு வைப்பார்.

மானிப்பாய் கோவில்பற்று ப. நோ. கூ. சங்கம் (வரையறுத்தது)

## லொறி என்ஜின் திருத்தம்

மேற்படி லொறியின் என்ஜினை முழுமையாகக் கழட்டி பூரணமாக திருத்தவேண்டி இருப்பதால் இதை திருத்துவதற்கான கூறுவிலைகள் 1983 மாசி மாதம் பதினைந்தாம் திகதி நண்பகல் 12-00 மணி வரைக்கும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும். கூறுவிலை அனுப்பும் பொழுது எவ்வளவு நாட்களில் திருத்தம் செய்து தர முடியும் என்பதைக் குறிப்பிடவும் தேவைப்படும் உப உறுப்புக்கள் எம்மால் வழங்கப்படும். மேலதிக விபரங்கள் சங்க காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர், (6113)

## வெளியிணைப்பு யந்திரம் கரையொதுங்கியது!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை புதிய துறைமுகப் பகுதியில் வந்து அடைந்தவெளியிணைப்பு இயந்திர மொன்று காங்கேசன் துறைப் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை புதிய துறைமுகப்பகுதியில் தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருந்த சமயம் துறைமுக அணைக்கட்டின் அருகே மீன்பிடி வள்ளங்களுக்கு உபயோகப்படுத்தும் பெறுமதி வாய்ந்த வெளியிணைப்பு இயந்திர மொன்று வந்து அடைந்திருக்கக் கண்டனர்.

இதுபற்றி துறைமுக அதிகாரிகளிடம் தொழிலாளர்கள் தெரிவித்ததையடுத்து இந்த வெளியிணைப்பு இயந்திரம் மீட்கப்பட்டு பின்னர் காங்கேசன் துறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஆழ்கடலில் விபத்தில் சிக்கிய படகுகளிலிருந்து இந்த வெளியிணைப்பு இயந்திரம் கடலில் வீழ்ந்திருக்கலா மெனவும் பின்னர் அலைகளால் இழுத்துச் செல்லப்பட்டு கரைக்கு வந்திருக்கலா மெனவும் நம்பப்படுகிறது காங்கேசன் துறைப் பொலிசார் இதுபற்றி விசாரணை செய்து வருகின்றனர்.

## மன்னார் செய்திகள்

எஸ். தர்மகுலசிங்கம்

### நீர் விநியோகம்

மன்னார்-கட்டுக்கரை குளத்தின் நீர்மட்டம் 3 அடி 3 அங்குலமாகக் குறைந்துள்ளதால் விவசாயிகளுக்கு பங்கீட்டு அடிப்படையில் நீர் வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு விவசாயிகளின் விவசாயத்திற்கு 7 நாட்களுக்கு ஒரு முறையே நீர் வழங்கப்பட்டு வருகிறது.

### இலுப்பக்கடவை அரிசி ஆலை

இலுப்பக்கடவை கம நலசேவை நிலையத்தினால் அமைக்கப்பட்ட அரிசி ஆலையை கமநலசேவை உதவி ஆணையாளர் திரு. கணேசு திறந்து வைத்தார். இலுப்பைக்கடவை கம நலசேவை நிலையத் தலைவர் திரு. வி. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழாவில் மன்னார் மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. வி. கைலாசபிள்ளை உட்பட பலர் கலந்து கொண்டனர். (கு)

### நெல் களஞ்சியங்கள்

மன்னார் மாவட்ட விவசாயிகளிடமிருந்து இவ்வருட காலபோக விவசாய நெல் கொள்முதல் செய்வதற்கு வசதியாக 6 நெல் களஞ்சியங்களை மன்னார் மாவட்ட நெல் சந்தைப் படுத்தும் சபை தெரிவு செய்துள்ளது.

முருங்கன், பொற்கேணி, நானாட்டான், ஆட்காட்டிவெளி, அடம்பன், சிறுநாவல்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள நெல்களஞ்சியங்களே தெரிவு செய்யப்பட்டுள்ளன. (க)

### ரூ. 30,000 சேமிப்பு

மன்னார் மாவட்டத்தில் நிஸ்கோ இயக்கத்தில் இவ்வருடம் அங்கத்தவர்களாகச் சேர்ந்த 350 இளைஞர் யுவதிகள் 30 ஆயிரம் ரூபாவை வைப்பிலிட்டுள்ளனர்.

இவ்வைப்புப் பணத்தில் இருந்து 4 யுவதிகளுக்கு கடன் அடிப்படையில் தையல் இயந்திரங்கள் வழங்கப்படும்.

இத்துடன் ஆடு, மாடு, கோழி, பன்றி வளர்ப்புக்கென 6 இளைஞர் யுவதிகளுக்கு தலா 1500 ரூபா வீதம் மொத்தம் 9 ஆயிரம் ரூபா கடன் அடிப்படையில் வழங்கப்படும். [க]

### மீண்டும் வேலை

பேசாலை மீன்பிடி கூட்டுத்தாபனத்தின் உதவி நிறைவேற்று முகாமையாளராகக் கடமையாற்றி கடந்த மாதம் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட திரு கில்வாவுக்கு மீண்டும் வேலை வழங்கப்பட்டுள்ளது.

இவர் பண்டாரவளை மீன்பிடி கூட்டுத்தாபன நிறைவேற்று முகாமையாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### கோரிக்கை

மன்னார் - வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கணித விஞ்ஞான ஆசிரியர்களை உடன் நியமிக்குமாறு வட்டக்கண்டல் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் மன்னார் கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### விபத்தில் சாரதிபலி

வீதியில் சென்று கொண்டிருந்த டிராக்டர் ஒன்று குடைசாய்ந்து விபத்துக்குள்ளானதால் டிராக்டரின் சாரதி ஸ்தலத்திலேயே மரணமானார் மடு வீதியில் இடம் பெற்ற இவ் விபத்தில் பூநகரியைச் சேர்ந்த மாணிக்கசிங்கம் 23 வயது இளைஞரே மரணமானவராகும் இவ்விபத்து மரணம் தொடர்பாக முருங்கன் பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

### பதவி உயர்வும் இடமாற்றமும்

பேசாலை மீன்பிடிக் கூட்டுத்தாபன நிறைவேற்று முகாமையாளராகக் கடமையாற்றிய திரு. வி. சுந்தரேஸ் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் அனுராதபுரம், புத்தளம், முல்லைத்தீவு ஆகிய மீன்பிடிக் கூட்டுத்தாபனங்களின் பிரதம நிறைவேற்று முகாமையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இவரது பிரதேசகாரியாலயம் முல்லைத்தீவில் இயங்கும்.

0 0.

மன்னார் அபிவிருத்திச் சபை செயலகத்தின் எழுதுவினைஞராகக் கடமையாற்றிய திரு. விமலேந்திரன் இம்மாதம் முதல் தாராபுரம் உப அலுவலக குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தராகத் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரது இடத்திற்கு தாராபுரம் உப அலுவலக குறித்துரைக்கப்பட்ட உத்தியோகத்தராகக் கடமையாற்றிய ஜனாப் எம். ஜி எம். தாஜுதீன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

### சட்ட ஆலோசகர்

மன்னார்,

மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபையின் சட்ட ஆலோசகராக சட்டத்தரணி செல்வி அருள்சீலி டயஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரை சட்ட ஆலோசகராக நியமிப்பதென கடந்த மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. [க]

## புதுடில்லி தேர்தல்:

# பாரதீய ஜனதா கட்சி இரு இடங்களைக் கைப்பற்றியது!

## இந்திராகாங்கிரஸுக்கு ஒருஇடம் கிடைத்தது

புதுடில்லி, பெப். 6

புதுடில்லியில் நடந்துள்ள உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் பாரதிய ஜனதா கட்சி இதுவரை 2 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. இந்திரா காங்கிரஸ் 1 இடத்தை மட்டும் கைப்பற்றியது

மிகுதி 153 இடங்களுக்கான வாக்குகள் எண்ணும் வேலை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

புதுடில்லியில் 160 நகரசபை இடங்களுக்கும் 56மாநகரசபை இடங்களுக்கும் தேர்தல் நடைபெற்றது.

இவ்விரு சபைகளிலும், தேர்தலுக்கு முன் இந்திரா காங்கிரஸே அதிகாரத்தில் இருந்தது.

தென்மாநிலத்தில் அண்மையில் நடந்த இரு தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து, வடக்கில் இந்திரா காங்கிரஸின் பலத்தை அறிவதற்கு இத்தேர்தல் ஒரு வாய்ப்பாக அமையும் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

தலைநகரைச் சூழ்ந்திருக்கும் மக்களின் ஆதரவு பற்றி ஏனைய மக்கள் அக்கறை காட்டுவதுஇல்லையென்ற, ஆனாலும் தென்மாநிலத்தில் இந்திரா காங்கிரஸிற்கு ஏற்பட்டதோல்வியைத் தொடர்ந்து இத்தேர்தல் முடிவுகளை சகல மக்களும் எதிர்பார்ப்பதாகவும் கூறப்படுகிறது. (க)

## சிங்கப்பூரில் மின்சார தடை; மக்கள் பாதிப்பு

சிங்கப்பூர், பெப். 6

சிங்கப்பூரில் நேற்று மின்சாரம் தடைப்பட்டதால் நகரம் இருளில் மூழ்கியது.

போக்குவரத்துத்துறை சமிக்ஞை வேலை செய்யாததினால், போக்குவரத்துத் தடை ஏற்பட்டது

கட்டிட மேல்மாடி 'லிப்டுகளில்' சிக்கியவர்களை மீட்பதில் தீயணைக்கும் படையினர் ஈடுபட்டனர்.

நேற்று மாலை 10 சதவீத மின்சாரம் மட்டுமே வழங்கக் கூடியதாயிருந்தது.

பிரதான இரு ஜெனரேட்டர்கள் பழுதடைந்ததே இந்த மின்சாரத் தடைக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது. இம்மின்சார தடையினால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். (க)

## ரூபா 50 லட்சம் நகைகள் விமானநிலையத்தில் சிக்கியது!

பம்பாய், பெப். 6

50 லட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்கள், பம்பாய் விமானநிலையத்தில் சுங்கஅதிகாரிகளால் கைப்பற்றப்பட்டது.

பாரசீககுடாநாட்டைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து இந்த நகைகள் கைப்பற்றப்பட்டது.

சுங்கப்பகுதியினர் சந்தேகநபரை மத்தியநீதிமன்றத்தில் ஆஜர்செய்தபோது இம்மாதம் 18ம் திகதிவரை றிமாண்டில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

## மயானத்தை இடம் மாற்றுவதற்கு எதிர்ப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறையில் மயானத்தை இடம்மாற்றுவது தொடர்பாக பொதுமக்கள் மத்தியில் எதிர்ப்பு கிளப்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காங்கேசன்துறை ஐயனார் கோவிலுக்கு பின்புறமாக கடற்கரையில் அமைந்துள்ள மயானம் காங்கேசன்துறை புதியதுறைமுக பகுதிக்குள் இருப்பதால் அதனை இடம் மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இம்மயானத்தை காங்கேசன் துறை மாவட்ட அபிவிருத்திச் சபை உப அலுவலகத்தின் பின்புறமாகவுள்ளகடற்கரைப் பகுதிக்கு இடம்மாற்றுவது தொடர்பாக ஆலோசனை செய்யப்பட்டதாகவும், அப்பகுதியில் குடிசனங்கள் வாழ்வதால் அங்கு மயானத்தை

(6-ம் பக்கம் பார்க்க)

பாகிஸ்தான் இஸ்லாமிய அரசியலமைப்பு

## ஊர்வலங்களுக்கும் பொதுக் கூட்டங்களுக்கும் தடை!

இஸ்லாமாபாத், பெ. 6

பாகிஸ்தானில் அமுல்செய்யப்படவிருக்கும் உத்தேச இஸ்லாமிய அரசியல் சாசனத்தின் கீழ் பொதுக்கூட்டங்களுக்கும் ஊர்வலங்களுக்கும் தடை விதிக்கப்படும.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜியா உல் ஹக், இஸ்லாமாபாத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- இத்தகைய இஸ்லாமிய அரசியல் சாசனத்தின் கீழ் அரசியல்வாதிகள் மக்களுடன் தொடர்புகொள்வதற்கு மண்டபங்களில் கூட்டங்கள் நடத்த அனுமதிக்கப்படும்.

பாகிஸ்தானின் 35-வது சுதந்திர தினம் ஆகஸ்ட் 14ம் திகதி நடைபெறும்போது இஸ்லாமிய அரசு உருவாக்கப் படும்.

இஸ்லாமிய அரசியல் சாசனத்தின் கீழ் அரசியல் இயக்கங்கள் பற்றியும் ஆயுதப் படையினரின் பணி பற்றியும் ஆராயப்படும் என்றும் அவர் தெரிவித்தார். [க]

3லட்சம் ரூபா

## கடத்தல் பொருட்கள் மதுரையில் சிக்கின!

சென்னை, பெப்.6

மதுரையில் லொறி ஒன்றிலிருந்து 3 லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை சுங்கப் பகுதியினர் கைப்பற்றி கடத்தலை முறியடித்தனர்.

இது தொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கடத்தல் பொருட்களில் நைலோன் வலைகள், கஸெட்டுகள் காணப்பட்டன.

ராமேஸ்வரத்தில் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான கடத்தல் பொருட்களை சுங்கப் பகுதியினர் கைப்பற்றினார்கள். இச் சம்பவம் தொடர்பாக இருவர் கைதுசெய்யப்பட்டனர். [க]

## இந்திய கோஷ்டி கபில்தேவ் தலைவரானார்

புதுடில்லி, பெப். 6

இந்திய கிரிக்கட் கோஷ்டித் தலைவராக கபில்தேவ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் மேற்கிந்திய தீவுகளில் நடைபெறும் கிரிக்கட் போட்டிகளுக்கு தலைமைதாங்குவார்.

பாகிஸ்தானில் நடந்த டெஸ்ட் போட்டியில், இவர் உபதலைவராக கடமையாற்றினார். தலைவராகஇருந்த சுனில் கவஸ்கார் தொடர்ந்து கோஷ்டியில் இடம்பெற்று விளையாடுவாரா என்பது தெரியவில்லை.

இந்திய கிரிக்கட்விளையாட்டு கட்டுப்பாட்டு குழு, கபில்தேவ்வை தலைவராக தெரிவு செய்தது.

மேற்கிந்திய தீவுகளில் 6 போட்டிகள் இடம்பெறும்.

இந்தியாவுக்கு

## வைரக்கல் ஏற்றுமதியால் 87 கோடி ரூபா கிடைக்கும்!

புதுடில்லி, பெப்.6

இந்தியா வைரக்கற்கள் ஏற்றுமதியில் முதலிடத்தை வகிக்கிறது.

மேற்கு ஐரோப்பா, அமெரிக்கா, யப்பான் ஆகிய நாடுகளுக்கு வைரக்கல் ஏற்றுமதி மூலம் இந்தியா அடுத்த நிதி ஆண்டில் 87 கோடி டாலரைப் பெறவிருக்கிறது.

இரத்தினக்கல் ஏற்றுமதிக் கூட்டுத்தாபன அதிபர், வைரக்கல் ஏற்றுமதியில் இஸ்ரேலின் இடத்தை இந்தியா பிடித்து முதலிடத்தை வகிப்பதாகக் கூறினார்.

மத்தியபிரதேசத்தில் வைரக்கல் பெறுவதற்காக அகழ்வு வேலைகள் நடைபெற்று வருகிறது.

முன்பு தேயிலை ஏற்றுமதி செய்துவந்த இந்தியா தற்போது வைரக்கல் ஏற்றுமதியில் அக்கறைகாட்டிவருகிறது. [க]

ரூ. 50,000 பெறுமதியுள்ள

## கடத்தல் மரம் சிக்கின சந்தேகநபர் மூவர் கைது

(வவனியா)

லொறியில் கடத்திச்செல்லப்பட்ட சுமார் 50 ஆயிரம் ரூபா பெறுமதிவாய்ந்தமுதிரை மரங்களை வவனியா பொலிசார் கைப்பற்றியுள்ளனர். சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். வீதியில் பனிக்கிநீராவி என்னுமிடத்தில் காட்டில் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு லொறியில் ஏற்றிச் செல்லப்பட்டபோது வவனியா பொலிசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில் விரைந்த வவனியா பொலிஸ் நிலைய தலைமை அதிகாரி திரு. சிறில் குணவர்த்தன, இன்ஸ்பெக்டர் திரு. ஹென்றிசில்வா, கான்ஸ்டபிள்கள் திரு. எஸ். சிவானந்தம், ஜனும் மஜுனுதீன் ஆகியோரே இக் கடத்தலை முறியடித்துள்ளனர்.

நகுலேந்திரன், ஆறுமுகம், தங்கவடிவேல் ஆகியோர் இக் கடத்தல் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட்டவர்கள் வவனியா மாவட்ட நீதிபதி திரு. கே. பெத்தியாகொட முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது எதிர்வரும் 14ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவு இட்டுள்ளார்.

## மீண்டும் தாக்குதல் முயற்சி

லண்டன், பெப். 6

சிரியாமீது தாக்குதல்நடத்த இஸ்ரேல் தயாராகி வருகிறது என்றும், மத்திய கிழக்கில் தற்போது ஏற்பட்டுள்ள அமைதி யுத்தம் ஒன்றுக்கு முன் காணப்படும் அமைதிஎன்று சோவியத் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது

புயலுக்கு முன் ஏற்படும் அமைதிதான் இது என்று அந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலுக்கு வடக்கிலும் லெபனானுக்கு தெற்கிலும் பெருமளவில் போர் விமானங்களின் நடமாட்டம் காணப்படுவதாகவும் கூறப்பட்டுள்ளது. [க]

## தற்கொலை

(கிளிநொச்சி)

மனநோயால் பீடிக்கப்பட்ட இரண்டு பிள்ளைகளின் தந்தையான 50வது நபர் ஒருவர் கிணற்றில்விழுந்துமரணத்தை தழுவிக்கொண்டார்.

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள ஐயன்குளம் என்னும் இடத்தைச் சேர்ந்த கறுப்பையா சுப்பையா என்பவரே மரணமானவராவார். இம் மரணம் சம்பந்தமான விசாரணையைக் கிளிநொச்சி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டார் சாட்சிகளை பொலிஸ் கான்ஸ்டபிள் ஜனாப் ஆர். ரி. பரீத் ஆஜர்செய்தார். மரணமானவரின் மனைவி முத்துப் பிச்சையும் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து தற்கொலை மரணம் என மரணவிசாரணை அதிகாரி திரு. யோகலிங்கம் தீர்ப்புவழங்கினார். (அ)

பங்களாதேஷ் பட்டதாரி மாணவர்

# அரசியலில் தீவிர அக்கறை காட்டியதால் பரீட்சையில் தோல்வி!

## 27,000 மாணவரில் 3,990 பேர் மட்டும் சித்தி

டாக்கா, பெப். 6

பங்களாதேஷின் பட்டதாரி மாணவர்கள் அரசியலில் அதிதீவிர அக்கறை காட்டுவதால் பரீட்சையில் படுதோல்வி அடைந்துள்ளனர்.

6 பல்கலைக்கழகங்களிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 27,000 மாணவர்களில் 3990 மாணவர்கள்மாத்திரமே சித்தியடைந்து பட்டம் பெற்றுள்ளனர்.

பங்களாதேஷ் பட்டதாரி மாணவர்களில் 85 சதவீதமானோர் அரசியலில் தீவிர அக்கறை காட்டியதால் பரீட்சையில் சித்திபெறவில்லையென்று, நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றிலிருந்து தெரியவந்துள்ளது.

பங்களாதேஷ் சமூகக் கல்வி நிலையம் நடத்திய ஆய்வு ஒன்றிலிருந்து மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்தாமல் அரசியலில் அக்கறைகாட்டிய தனாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது

ஐந்தில் ஒரு பங்கு மாணவர்கள் மட்டுமே கல்வியில்கவனம் செலுத்தியுள்ளதாக அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

உலகில் எழுதப்படிக்கத் தெரிந்த நாடுகளில் பங்களாதேஷ் பின்தங்கியுள்ள நாடாகும்.

இங்குள்ள 9 கோடி மக்களில் 25 சதவீதத்திற்கு சற்றுக் கூடிய மக்கள்மட்டுமே எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாகும். [க]

### மணிவாக்கு

வேற்றுமையுற்ற குடும்பம் நிலைக்காது - பாதி அடிமைப் பண்பும், பாதி சுதந்திர மக்களையும் உடைய எந்த அரசாங்கமும் நிலைக்கமுடியாது.

— ஆபிரகாம் லிங்கன்

# நமது நோக்கு

## சட்டமும் சுதந்திரமும்

கோழியா முட்டையா முந்தியதென்றவாதம் முடிவடையாதது போல் சட்டமா சுதந்திரமா முந்தியதென்பது இன்றும் பேசப்பட்டு வருகிறது.

இது வீண் வாதமென்பது சற்றே சிந்திக்கத் தெளிவாகின்றது.

கோழி முட்டையிடுமென்பதை அறியாதார் எவருமிலர்; முட்டை குஞ்சு பொரிக்குமென்பதும் அவ்வாறே!

சுதந்திரத்தைப் பாதுகாக்கவே சட்டமெழுந்தது; சட்டத்துக்கமைந்த வாழ்விலேயே உண்மைச் சுதந்திரம் உருவாகின்றது.

இருபெரும் விடயங்களை இவ்வளவு சுலபமாகவிளக்கி விட்டோமென்று நாம் இறுமாப்புக் கொள்ளவில்லை; எவரும் இவ்விடயங்களையிட்டு இறுமாப்புக் கொள்வது மடைமை என்பதற்கு இன்று இரு நாடுகள் சாட்சியம் அளிக்கின்றன.

பிரிட்டனும் அமெரிக்காவும் அவ்விரு நாடுகள்.

சட்ட வாழ்வுக்கு பேர்போன நாடு பிரிட்டன்; சுதந்திரத்துக்கு வரைவிலக்கணம் வழங்கிய நாடு ஆபிரகாம் லிங்கனின் அமெரிக்கா.

சட்டத்தைக் கௌரவிக்கும் பண்பு பிரிட்டிஷ் மக்களின் தனிப்பட்ட சொத்து. பிரதான வீதியில், பாதசாரிகளுக்கு கோடிட்ட எல்லைக்கு வந்ததும் பிரிட்டிஷ் மோட்டார் சாரதி தன்னை அறியாமலே வண்டியை நிறுத்துவது இதற்குத் தகுந்த உதாரணம்.

எங்கள் நகரங்களிற் போல் வண்டியோ 'கால் நடையோ' முந்துவதென்ற போட்டிக்கு பிரிட்டனில் இடமில்லை. இந்தப் பண்புக்கு இன்னொரு சவால் ஏற்பட்டிருக்கிறது.

சென்ற வருடம் ஆடி மாதம் பிரிட்டிஷ்மகாராணியின் பக்கிங்காம் அரண்மனைக்குள் அத்துமீறி உள்ளிட்ட 32 வயதுடைய ஒரு சாதாரண லண்டன் நகரவாசி, இரவிலே 56 வயதுடைய மகாராணியின் படுக்கையறைக்குட்சென்று மகாராணியுடன் சம்பாஷிக்க எத்தனித்த சம்பவம் பெரும் அதிர்ச்சி ஏற்படுத்தியது தெரிந்ததே!

இன்று வரைக்கும் இது பற்றிச் சட்ட ஆராய்ச்சி நடத்திய பிரிட்டிஷ் அரசு, இந்த மனிதனுக்கெதிராக வழக்குத் தொடர்வதற்கு சட்டத்தில் இடமில்லை என்று கையை விரித்திருக்கிறது கவனத்திற்குரியது.

இன்னொருவருடைய காணிக்குள் அத்துமீறிப் பிரவேசித்தல் குற்றச்செயல் அல்ல; அது 'சிவில்' விடயம்; அதனால் பாதிக்கப்பட்டவர் நட்டஈடு கோரி வழக்குத் தொடரலாம்; அவ்வளவுதான்.

சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என்பது பிரிட்டனில் ஒரு வெறும் புருடா வல்ல; 'அனைவரும்' என்றால் அரசுக்கு எதிரான கட்சிகள் என்பதல்ல; மகாராணி தொடக்கம் முட்டை தூக்குபவர் வரைக்குமென்பது அர்த்தம்.

எனவே மகாராணிக்கு விசேட மதிப்பளிக்க ஒரு புதுச் சட்டம் தயார் செய்வது விரும்பத்தகாதது என்றும் சட்ட நிபுணர்கள் சுட்டிக் காட்டியிருக்கின்றனர். பொதுஜன அபிப்பிராயம் கோரப்பட்டிருக்கிறது.

நகைச்சுவையிலே பிரிட்டிஷ் பொது மக்களின் வாழ்வு அமைந்திருப்பதைச் சட்டம் பிரதிபலிக்கின்றது.

அத்துமீறலை ஒரு குற்றமாகக் கணிப்பதானல், அண்டை வளவிற்குள் பந்து போய்விட்டதென்றுதேடப் போகும் பையன் எவனும் குற்றவாளியாகக் காணப்படுவானென்ற எச்சரிக்கையும் வழங்கப்பட்டிருக்கிறது. என்னே பிரிட்டிஷ் சட்ட நிபுணத்துவம்!

இச்சம்பவத்தின் இரு கோணங்கள் எங்கள் நாட்டுக்கு நல்ல பாடம் புகட்ட வல்லவை; ஒன்று பிரிட்டனில் ஆட்சி செய்யும் எலிஸபெத் மகாராணியின் லண்டன் அரண்மனைக்கு சாதாரண ஒரு மனிதன் அதுவும் நள்ளிரவில் படுக்கை அறைக்குள் சென்று அவருடன் பேச முடிந்ததே! இதுபொது மக்கள் மட்டுமல்ல அரசாங்கமும் எழுப்பிய அவலக் குரல்; எங்கள் நாட்டின் நன்மதிப்பு காற்றில் பறக்கிறதே என்ற பிரலாபம்.

மற்றது; அரசனோ ஆண்டியோ சட்டத்துக்கு முன் எவரும் சமம்; சட்டத்தின்படி அது குற்றமல்ல. சட்டத்தால் மட்டும் நாட்டின் மதிப்பையோ, மக்களின் பண்பையோ உயர்த்திவிட முடியாது.

தேவைக்கேற்றபடி சட்டத்தை இயற்றவோ, அல்லது திருத்தங்கொண்டு வரவோ விரைவது விவேகமற்ற செயல் என்பது நாம் உணர வேண்டிய உண்மை.

தனிமனிதனின் சுதந்திரமென்னொரு சாமான் அமெரிக்காவில் இருப்பதுபோல் வேறெங்கும் காணமுடியாதென்று கொள்ளப்படுகின்றது.

அடுத்தமாதம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யும் எலிஸபெத் மகாராணிக்கு எதிர்ப்புத் தெரிவிக்க 20,000 மக்கள்கொண்ட ஒரு ஆர்ப்பாட்டம் தயாராகின்றது.

ஆர்ப்பாட்டத் தலைவர் ஒரு பிரபல தொழிற்சங்கவாதி. ஆர்ப்பாட்டமும் எதிர்ப்பும் மிக அமைதியாக நடைபெறுமென்று உறுதியளித்திருக்கிறார். அமெரிக்க பொலிசுக்கும் ராணுவத்திற்கும் எவ்வித பிரச்னையும் ஏற்படாதவாறு தாம் மகா மகாராணியையும் எடின்பரோ கோமகனையும் பாதுகாக்க தக்க நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கூறியிருக்கிறார்.

வெள்ளைமாளிகையில் ஒரு பத்து 'கோஸ் டின்னர்' நடைபெறும். மகாராணிக்கு நல்லாசி கூறி வழியனுப்பி வைப்பதும் அமெரிக்க அரசின் கடமை என்று கூறிய தொழிற்சங்கத் தலைவர். அமெரிக்காவில் வறிய மக்களின் நிலையென்னவென்பதையும் எடுத்து விளக்க இச்சந்தர்ப்பத்தில் தமக்கு உரிமையுண்டென்று வாதாடுகின்றார்.

இங்கிலாந்தில் சுதந்திர வாழ்வின் சட்டத்தின் மேம்பாட்டை விளக்க பிரிட்டிஷ் மகாராணியே உதாரணமென்றால் அமெரிக்காவின் கட்டுப்பாடின்ன பொது வாழ்வில் தனிமனிதனின் சுதந்திரம் எவ்வாறு மதிக்கப்படுகிறதென்பதற்கும் அவரே காரணமாகின்றார்; விஜயத்தைத் துணிவுடன் மேற்கொள்கின்றார் இவ்விரு நாடுகளின் உத்தம மரபுகளுக்கு பிரிட்டிஷ் மகாராணி மதிப்பளிக்க முன்வந்திருப்பது நாகரிக வாழ்வுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.

35 வயதடைந்த சுதந்திர இலங்கைக்கு இது நெடுந்தூரப் பயணத்தை நினைவூட்டுகின்றது.

---

கிளிநொச்சி, முல்லை தொகுதிகளில்

# 4000 பேருக்கு இலவச கண் சிகிச்சை

### 1000 பேருக்குச் சத்திர சிகிச்சை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, முல்லைத்தீவுத் தொகுதிகளில் இலவச கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்படவுள்ளது கிளிநொச்சி, பரந்தன் ரோட்டறிக்கழகமும் 'ஐகெயர்' ஸ்ரீலங்கா நிறுவனமும் இணைந்து இச்சத்திர சிகிச்சையை நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

கண் வைத்திய நிபுணர்கள் தாதிமார் அடங்கிய 35 பேர் கொண்ட குழுவினர் இம்மாதம் 20-ந் திகதி கொழும்பில் இருந்து கிளிநொச்சியை வந்தடைவார்கள். 21-ந் திகதி செம்பியன்பற்று அரசினர் வைத்தியசாலையிலும் 22-ந் திகதி பூநகரி அரசினர் வைத்தியசாலையிலும், 23-ந் திகதி புதுக்குடியிருப்பு அரசினர் வைத்தியசாலையிலும், 24-ந் திகதி கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையிலும் கண் பரிசோதனை செய்யப்பட்டு 25-ம் திகதி முதல் அடுத்த மாதம் 5-ம் திகதி வரை கிளிநொச்சியில் கண் சத்திரசிகிச்சை மேற்கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக ரோட்டறிக் கழகச் செயலாளர் டாக்டர் என். ஸ்ரீதரன் கிளிநொச்சித் தொகுதிப் பத்திரிகையாளர் மகாநாட்டில் தெரிவித்தார்.

நாலாயிரம் கண் நோயாளர்களுக்குக் கண் பரிசோதனை செய்யப்பட்டுச் சிகிச்சையளிக்கவும், ஆயிரம் பேருக்குக்கண் சத்திர சிகிச்சை செய்யவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கையின் எப்பகுதி மக்களும் இச்சிகிச்சையைப் பெற முடியும் எனவும் டாக்டர் சிறீதரன் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகையாளர் மகாநாட்டில் பரந்தன் கிளிநொச்சி ரோட்டறிக் கழகத் தலைவர் ஆ. குலசேகரம் பிள்ளையும் கலந்துகொண்டார்.

---

## கண்டியில் நடைபெற்ற சர்வதேசக்கத்தோலிக்க குருமார்கள் மாநாடு

(கொழும்பு)

உலகில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த கத்தோலிக்க மதகுருமார்கள் மகாநாடு கண்டியில் நடைபெற்றது

கண்டி சென். அந்தனிஸ் கதீட்ரல் தேவாலயத்தில் நடந்த ஆராதனை மாநாட்டின் முக்கிய அம்சமாக அமைந்தது.

இந்த ஆராதனை சுதந்திர தினம் தொடர்பாகவும் நாட்டின் சிறந்த எதிர்காலத்திற்கான வழிபாட்டிற்கும் நடந்தது.

இம்மாநாட்டில் இந்தோனேஷியா, பங்களாதேஷ், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், யப்பான், தாய்லாந்து, சீனு, இந்தியா, கொரியா, மலேசியா, மெக்சிக்கோ, பிரேசில், தன்சானியா, அமெரிக்கா, பிரான்சு ஆகிய நாடுகளைச் சேர்ந்த 36 கத்தோலிக்க மதகுருமார்கள் கலந்துகொண்டனர். [இ]

---

# மக்கள் கருத்து

## மினி பஸ் சீர்கேடு

போக்குவரத்து சேவை சிறப்பாகச் செயல்படவே அரசாங்கம் தனியார் பஸ் சேவைகளை நடாத்த அனுமதியளித்தது. இருப்பினும் அதே மினிபஸ் சேவை பொதுமக்களுக்குக் கஷ்டங்களைக் கொடுத்துவரும் சம்பவங்கள் கொழும்புத் துறையில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வருகின்றன

இங்கு சேவையில் ஈடுபடும் வாகனங்கள் சிறியனவாக இருப்பதினால் அதிகம் பேரை ஏற்ற முன்வரும்போது மக்கள் நெரிசலில் அகப்பட்டுக்கொள்கின்றார்கள். இவற்றில் பலர் மதுபோதையில் பிரயாணம் செய்வதினால் அவர்கள் செய்யும் அங்கச் சேஸ்டைகள் பொதுமக்களுக்கு வீண் தொந்தரவினை கொடுக்கின்றன. அத்துடன் பிரயாணத்துக்கு இடைஞ்சலாக மீன், கணவாய் போன்றவற்றினை ஏற்றி வருவதினால் அதுவும் மக்களுக்குச் சகிக்கமுடியாத நிலைமையினை உண்டாக்கிறது. வாகன உரிமையாளர்கள் லாபம்கருதி செயல்படுவதினால் இத்தகைய நிலைமையினை அவர்கள் கண்டிக்க முன்வருவதில்லை. இனியும் வாகன உரிமையாளர்கள் இந்த நிலையில் சீர்திருத்தம் செய்யாவிட்டால் கொழும்புத்துறை மக்கள் மினிபஸ் சேவையினைப் பகிஷ்கரிக்கும் நிலைதான் உருவாகமுடியும்.

அ. கொர்னேலியஸ்,
55, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

---

## "முதியோர்களைப் பேணுதல் நமது கடமை" - 'அமிர்'

[மயிலிட்டி]

"நன்றியுணர்வு மனிதசமூகத்துக்கு அத்தியாவசியமாக இருக்கவேண்டிய ஒன்று. தங்கள் குடும்பம், தங்கள் பிள்ளைகள், தங்கள் சமுதாயம், தங்கள் மக்கள் நலத்துடன் வாழவழிவகுத்துக்கொ(?)த்த பெரியவர்களாகிய முதியவர்களைப் பேணி அவர்களுக்கு மதிப்பளிக்கவேண்டியது நமது கடமையாகும், இத்தகைய முதியவர்களின் சிரமங்களைப் போக்கி சமுதாயம் அவர்களுக்கு உதவிசெய்ய முன்வர வேண்டும்"

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஏழாலையில் நடைபெற்ற கட்டுவன் கிராமோதயசபையின் முதியோர்தினவிழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

கட்டுவன் கிராமோதய

[5-ம் பக்கம் பார்க்க]

---

(யாழ். கடைத்தெரு வேம்படி அருள்மிகு சித்தி விநாயகர் திருவிழா கடந்த 3ம் திகதி ஆரம்பமாகியுள்ளது.)

## கடைத்தெரு விநாயகனே கடையனை ஆளையா

மருளும் மனமும் கொடிய வெங் குணமும்
மதித்தறி யாததன் மதியும்
இருளுறு நிலையும் நீக்கி நின் அடியை
எந்த நாள் அடைகுவன் எளியேன்
அருளுறும் ஒளியாய் அவ்வெளிக்குள்ளே
அமர்ந்த சிற்பரவொளி நிறைவே
வெருளுறு சமயத் தறி யொணுச் சித்தி
விநாயக விக்கினேச் சுரனே.

0 0 0

தஞ்சம் என்றுனைச் சார்ந்தனன் எந்தை நீ
தானும் இந்தச் செகத்தவர் போலவே
வஞ்சம் எண்ணி இருந்தடில் என் செய்வேன்
வஞ்சம் அற்ற மனத்துறை அண்ணலே
பஞ்சபாதகம் தீர்த்தனை என்று நின்
பாத பங்கயம் பற்றினன் பாவியேன்
விஞ்ச நல்லருள் வேண்டித் தருதியோ
விளங்கும் சித்தி விநாயக வள்ளலே.

0 0 0

ஆணி லேயன்றி ஆருயிர்ப் பெண்ணிலே
அலியி லேயிவ் வடியனைப் போலவே
காணி லேனொரு பாவியை இப்பெருங்
கள்ள நெஞ்சக் கடையனை ஆளையா
ஏணி லே இடர் எய்த விடுத்தியேல்
என்செய் கேனினி இவ்வுலகத்திலே
வீணி லே யுழைப் பேனருள் ஐயனே
விளங்குந் சித்திவிநாயக வள்ளலே

-- வண்ணைக்கலைஞன்.

"காங்கேசன்துறைமுகம்'

# இந்திய - ஈழமக்கள் நட்புறவுக்கு வழிபிறக்கும்"

[மயிலிட்டி

"காங்கேசன்துறைத் துறைமுகவேலைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் இந்திய ஈழமக்களிடையே நட்புறவு ஏற்படவழி பிறக்கும். இதன் மூலம் இந்திய மக்களின் கலாசாரங்களை நாமும், நமது கலாசாரங்களை இந்திய மக்களும் அறிந்து கொள்ளலாம். இதன் மூலம் நமது ஈழத்தின் பல்துறையிலும் வளர்ச்சியிம் முன்னேற்றமும் காணும் நிலைஏற்படும்"

இவ்வாறு வர்த்தக விளா.னில் நடைபெற்ற "வயல்." கலை இலக்கிய வட்டத்தின் கருத்தரங்கில் உரையாற்றிய இணைச்செயலாளர் திரு. சி. உதயகுமார் கூறினர். வயல் இலக்கிய வட்டத்தின் முதலாவது கருத்தரங்கு இதுவாகும். இதில் தமிழக அறிஞர் திரு. கோவேந்தன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். 'வயல்' கலை இலக்கிய வட்டத்தலைவரும், பல்கலைக் கழக விரிவுரையாளருமாகிய திரு. நா. சுப்பிரமணியஐயர் தலைமையில் இக் கருத்தரங்கு நடைபெற்றது.

திரு. ந. சபேசனும் உரையாற்றினர். (மா)

## இன்று திறப்புவிழா

[யாழ்ப்பாணம்]

கருகம்பனை — மயிலங்கூடல் கிராம அபிருத்திச் சங்கம் இன்று பிற்பகல் தையற் பயிற்சி நிலையம் ஒன்றைக் கருகம்பனையில் தொடங்கவுள்ளது. மாண்புமிகு எதிர்க்கட்சி முதல்வர் திரு அ. அமிர்தலிங்கம் தையற் பயிற்சி நிலையத்தைத் திறந்துவைப்பார்.

திரு. சு. கனககபை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திருவாளர்கள் க. மகாதேவா, பி. அருள் நாயகம், க. சிறீபதி, அ. நிமலன், வ. கந்தையா, சு. திருச்சிற்றம்பலம். செ. வரதராசப்பெருமாள், சி. நிர்மலன் ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள்.

## பாடசாலைக்கு தொழிற்கூடம்

(துணுக்காய்)

மல்லாவி மகாவித்தியாலய ஆசிரியர், மாணவர், பெற்றோரின் நீண்ட நாட் கோரிக்கையின் பயனாக இப் பாடசாலைக்கு தொழிற்கூடம் ஒன்றை கட்ட முல்லைத்தீவு மாவட்ட கல்வித் திணைக்களம் நிதி வழங்கியுள்ளது. இக்கட்டிடம் அவசரமாக கட்டப்பட்டு வருகின்றது. பாடசாலை மாணவர்களின் கை வினை, கைத்தொழில், தச்சுதொழில், நெசவு போன்ற தொழிற்பயிற்சியை மேற்கொள்ளவே இத்தொழிற்கூடம் கட்டப்பட்டு வருகின்றது. இதற்கான நிதிசெதியை முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திச்சபை வழங்கியுள்ளது. (ப)

## மன்னர் டிப்போவில் பஸ்ஸுக்கு தீவைக்கும் முயற்சி முறியடிப்பு!

(மன்னர்)

மன்னர் டிப்போவில் உள்ள பஸ் ஒன்றிற்கு தீ வைத்து சேதப்படுத்துவதற்கு எடுத்த முயற்சி ஆரம்பத்திலே முறியடிக்கப் பட்டது

கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு 12 மணியளவில் மன்னர் டிப்போவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸிற்கு கீழே சிரட்டை ஒன்றில் நெருப்பு வைக்கப்பட்டிருந்தது.

சம்பவதினம் இரவு கடமையாற்றிய மன்னர் டிப்போ அதிகாரி ஒருவர் பஸ்சிற்கு கீழே வைக்கப்பட்டிருந்த நெருப்பைக் கண்டதும் உடனடியாக நீர் ஊற்றி அணைத்தார்

இச்சம்பவம் பற்றி டிப்போவில் கடமையாற்றிய அதிகாரி மன்னர் பொலிசில் புகார் செய்தார்.

மன்னர் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன் சுகுணேந்திரன் தலைமையிலான பொலிஸ் கோஷ்டியினர் இதுபற்றி விசாரணை நடத்தி வருகின்றனர். (க)

## தையல் பயிற்சி

(துணுக்காய்)

முல்லைத்திவு மாவட்ட தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரின் யுவதிகள் 8 பேர் தையல் பயிற்சியை மேற்கொள்வதற்காக நிலாவெளி பயிற்சிக் கல்லூரிக்கு சென்றுள்ளனர்.

துணுக்காய், பாண்டியன் குளம், புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு ஆகிய நான்கு உதவி அரசாங்க அதிபர்பிரிவிலிருந்து 2 பேர் வீதம் தெரிவு செய்யப்பட்டு சென்றுள்ளனர் இவர்களுக்கான பிரயாண, வசிப்பிட, உணவு ஒழுங்குகளை முல்லைத்தீவு மாவட்ட தேசிய இளைஞர் சேவைமன்றத்தினர் பொறுப் பேற்றுள்ளனர்.

## வேளாங்கண்ணி ஆண்டுஉற்சவம்

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறை எழிலூரம்பதி அருள்மிகு அன்னை வேளாங்கண்ணி மாதாவின் வருடாந்தஉற்சவம் இம்மாதம் 10ம், 11ம் திகதிகளில் இடம் பெறவுள்ளது. [ஜெ]

## சமய அறிவுப் போட்டி

(சுண்டிக்குளி)

யாழ். சாந்தைமர்மடம் கற்பகவிநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் வழமைபோல் இம்மாதம் சமய அறிவுப் பரீட்சை நடாத்துகின்றது.

இப்போட்டியில் சமய அறிவுப் போட்டி—திருமுறை மனனப் போட்டி என்பன இடம் பெறும். (ப)

நல்லூர்

## பாவனையாளர் சங்கம்

[கோண்டாவில்]

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான வருடாந்த பிரதேச பாவனையாளர் சங்கப் பொதுக்கூட்டம் தலைவர் திரு. என். வாமதேவன் தலைமையில் நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்

தலைவர் திரு. எஸ். ஏ. ரி. வடிவேலு உப-தலைவர் திரு. ந. ஜெயதிலகன், செயலாளர் திரு. நா. நவரத்தினராசா, உப-செயலாளர் திரு. இ மாசிலாமணி, பொருளாளர் திரு. பூ. த. இராசரத்தினம் நான்குபேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர்.

கூட்டத்தில் விலைக்கட்டுப் பாட்டுப் பரிசோதகர் திரு. எம். சி நவரத்தினமும் கலந்து கொண்டார். [மா]

## முதியோர்களை ..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சபைத் தலைவர் திரு. ந. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

உதவி அரசாங்க அதிபர் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்துவைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் முதியவர்களுக்கு, கட்டுவன் கிராமோதயசபையினரால் மனமுவந்து அளிக்கப்பட்ட உணவு, உடை முதலியவற்றை வழங்கினர்.

திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்துபேசுகையில் குறிப்பிட்டதாவது;

"முன்னேற்றமடைந்த நாடுகளில் அரசாங்கமே முதியோர் பென்சன் திட்டத்தை வகுத்து அவர்களை கௌரவித்துவருகின்றது. ஆனுல் முதியவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைச் சமுதாயம் தீர்க்கமுன்வர வேண்டிய நிர்ப்பந்தம் நமது நாட்டில் ஏற்பட்டுள்ளது.

"ஒருகாலத்தில் பிள்ளைகளின் கடமை பெற்றோரைத் தாங்குதலாக இருந்தது. இன்று பலர் வெளிநாடுகளில் வசிப்பதால் பெற்றோர் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

எங்கள் சமுதாயத்தில் முதியோர் விடுதிகள் அற்றநிலையைப் போக்க முதியோர்விடுதிகளை அமைக்கவேண்டியது அத்தியாவசியமானதாகும். இதன்மூலம் வசதியற்ற முதியவர்கள் வசதிகளுடன் வாழ ஒவ்வொரு கிராமோதயசபை, பிரதேசசபைகளும் வழிசெய்ய வேண்டும் என்றார்.

மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசாவினுல் அன்பளிக்கப்பட்ட சவர்க்கார வகைகள், புத்தகங்களும் முதியவர்களுக்கு வழங்கப்பட்டன. [மா]

## பெற்றோர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

உருத்திரபுரம்கிழக்கு மாதர் முன்னேற்றச் சங்கம், சிறுவர் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்க விசேட பொதுக்கூட்டத்தை அண்மையில் கார்த்திநிலையத்தில் நடத்தியது. திருமதி பொன்னம்பலம் மகேஸ்வரி தலைமையில் மௌனப் பிரார்த்தனையுடன் கூட்டம் ஆரம்பமாகியது. செயலாளர் திருமதி ஆ. செல்வரத்தினம், நெசவு ஆசிரியை திருமதி தா செல்வமுத்து ஆகியோர் சிறுவர்பாடசாலையைச் சிறப்புடன் தொடர்ந்து நடத்தக்கூடிய வழிவகைகளைப் பற்றி விளக்கினர். [மா]


# மாபெரும் காணி விற்பனை

கைதடி சந்தி — கண்டி வீதி,

18 வீடு கட்டக்கூடிய காணிகள் 18




Scale : 1: 2000.

மேலதிக விபரங்கட்கு:-

தோட்டக்காணிப் பிரிவு

TFC த பினன்ஸ் கொம்பனி லிமிட்டெட்

249, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி : 021 - 23680



மீண்டும் தொலைக்காட்சியில் 'மட்ருஸ்' நிகழ்ச்சிகள் தெளிவாகத் தெரிய ஆரம்பித்துள்ளதால்

உத்தரவாதத்துடன் 'மட்ருஸ்' ஏரியலை உடன் பொருத்திக்கொள்ள

வீனஸ் 266/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நியூ வீனஸ் 79/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மின் இணைப்பு: துணுக்காய், யோகபுரம் விஸ்தரிப்பு

(துணுக்காய்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பன்முகப்படுத்தப்பட்ட மின் இணைப்புத் திட்டத்தின்கீழ் துணுக்காய், யோகபுரம் பிரதேசங்களும் மிக விரைவில் மின் ஒளியை பெற இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்கீழ் துணுக்காய் - மாங்குளம் பிரதான வீதிகள் துணுக்காய் - யோகபுரம், மல்லாவி கிராமங்களும் அரசாங்க ஸ்தாபனங்களும் மின் இணைப்பை பெற இருக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் ஏ. ஆர். மன்சூரின் முயற்சியால் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சு இதற்கான நிதி வசதியை அளித்திருக்கிறது. துணுக்காய்ப் பகுதி கிராமோதய சபைகளும் பிரதேச அபிவிருத்திசபையினரும் கூட்டாக எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாகவே இந்த மின்சாரவசதியளிக்கப்பட இருப்பதாக துணுக்காய் பிரதேச சபைத் தலைவர் திரு. ப. மயில்வாகனம் தெரிவித்தார்.

## அறிவுவளர்ச்சிக்கு வாசிப்பு அவசியம்'

(அரியாலை)

சிறுவர் முதல் பெரியோர் வரை எல்லோரும் தினமும் வாசிக்க வேண்டும். அப்பொழுதுதான் அறிவுவளர்ச்சியடையும் பாலரின் கல்வி வளர்ச்சிக்காக வருடந்தோறும் பத்தாயிரம் அரிவரிச் சுவடி ஏடுகளை அச்சிட்டு இலவசமாக வழங்கி வருகின்றோம். இவைகளை மிகவும் கவனமாக கப்பாவித்துப் பயன் பெற வேண்டியது எல்லோருடைய கடமையாகும்'

இவ்வாறு சிவ நெறிப்புரவலர் க. கனகராசா ஜே. பி. கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண கிராம அபிவிருத்திச் சங்க சனசமூக நிலையப் பாலர் பாடசாலையில் புதிய மாணவருக்கு ஏடுதொடக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. எஸ். வாமதேவன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் பாலர் பாடசாலைக்குரிய பாலர் அரிச்சுவடி ஏடுகளை பாலர் பாடசாலை ஆசிரியை செல்வி சே. ஞானம்மாவிடமும். பொன்மொழிகள் பதித்த படங்களை நிலையச் செயலாளர் திரு. ஐ. இராசரத்தினத்திடமும் திரு. கனகராசா கையளித்தார்.

(அ)

## சங்காபிஷேகம்

(பண்டத்தரிப்பு)

சில்லாலை ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த சங்காபிஷேகமும் அன்னதானமும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

[வெ]

# "இராணுவத்தினரின் உதவியுடன் எதிரிகளைக் கைதுசெய்தேன்"

## பொலிஸ் ஜீப்தாக்குதல் வழக்கில் சப்இன்ஸ்பெக்டர்

[புலோலி]

''வல்லை மகளிர் பாடசாலைக்கு முன்பாக இராணுவத்தினரின் உதவியுடன் 1ம். 2ம் எதிரிகளைக் கைது செய்தேன். அப்போது என்னிடம் றிவோல்வர் இருந்தது. ஏனைய பொலிசாரும் ஆயுதம் தாங்கியிருந்தார்கள்''

இவ்வாறு வல்வெட்டித்துறைப்பொலிஸ் ஜீப் வண்டியைச் சேதப்படுத்தி பொலிசாரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்த முயற்சித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் சாட்சியமளித்த வல்வெட்டித்துறைப் பொலிஸ் சப். இன்ஸ்பெக்டர் திரு பிரேம்லால் லியன ஆராச்சி 1ம் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். டி. இரத்தினசிங்கத்தால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது குறிப்பிட்டார்.

இவ்வழக்கு விசாரணை பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. வி.பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டுவருகின்றது. தொடர்ந்து சட்டத்தரணி திரு. இரத்தினசிங்கத்தால் குறுக்குவிசாரணை செய்யப்பட்ட சப் இன்ஸ்பெக்டர் குறிப்பிட்டதாவது:

சம்பவதினம் அந்த ஜீப்வண்டியில் அந்த இரவு என்னுடன் நாலுபேர் இருந்தார்கள். நானே ஜீப் வண்டியைச் செலுத்திச் சென்றேன், என்னுடன் முன்னுக்குச் செல்வராசா இருந்தார். அந்த நேரத்தில் என்னிடம் றிவோல்வர் இருந்தது. மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆயுதந்தாங்கியிருந்தார்கள். நான்போகும் போது சம்பவம் நடந்த இடத்தில் கண்ட 15பேர்களில் எனக்கு அறிந்தவர்கள் ஒருவரும் இல்லை. இவர்களையும் எனக்குத் தெரியாது. அதாவது அறிமுகமில்லாதவர்கள். இந்தச் சம்பவம் நடந்து 35, 40 நிமிடங்களின் பின்புதான் இவர்களைக் கைதுசெய்தேன். இந்தச் சம்பவம் நடந்த இடத்திலிருந்து அரைமைல் தூரத்துக்கப்பால் வல்லை மகளிர் பாடசாலைக்கு முன்பாகத்தான் இந்த இருவரையும் கைதுசெய்தேன். அப்போது இந்த இரு எதிரிகளும் சாதாரணமாக நடந்து கொண்டிருந்தார்கள். இந்த எதிரிகளை நான் பாதையிற்கண்டபோது ஜீப்பை நிற்பாட்டினேன். உடனே இவர்கள் ஓடினார்கள். மரியாதையாக வாழும் ஒருவர் எனது அனுபவத்தின்படி சொன்னால் ஜீப்வண்டியைக் கண்டு ஓடமாட்டார்கள், நான் பொலிஸ் அத்தியட்சருக்குக் கொடுத்த தகவலின்படி பொலிஸ் உத்தியோகத்தர்கள் மன்றில் அறிக்கை சமர்ப்பித்தார்கள், இவர்களுடன் கண்ட மற்றைய ஆட்களைத் தெரியும் ஆனால் கைது செய்ய வில்லை என்று கூறியிருப்பேன். எனது தகவலின்படி சேதப்படுத்தப்பட்ட ஜீப்வண்டியை மன்றில் பாரப்படுத்த வில்லை. அந்த ஜீப் வண்டிக்கு ஏற்பட்ட சேதப்பெறுமதியை நானே மதிப்பீடு செய்தேன். லெட்டினன் செனவிரத்தின மற்றும் இராணுவ உத்தியோகத்தர்கள், இவர்களைக் கைது செய்வதற்கு உதவி செய்தார்கள். இராணுவ உத்தியோகத்தர்கள் இன்று சாட்சியாக மன்றிற்கு சமூகமளிக்கவில்லை. இராணுவ வீரர்கள் ஒரு இராணுவ லொறியிலும் ஜீப்பிலுமாக 15. 20 பேர் அளவில் வந்திருப்பார்கள். அப்படி எறியப்பட்ட கல் ஜீப் வண்டியின் முன் கண்ணாடியிற்பட்டதும் அந்த ஜீப்வண்டிநொருங்கி விழவில்லை, பொலிஸ் அத்தியட்சகர் சேதப்படுத்தப்பட்ட ஜீப்வண்டியைப் பார்வையிட்டார். அப்படியிருந்தும் நானே அந்தச் சேதத்தின் மதிப்பீட்டை மதிப்பிட்டேன். எறியப்பட்ட கல் ஜீப்வண்டியில் பட்டநேரத்தில ஜீப் வண்டி நகர்ந்து கொண்டிருந்தது. ஜீப்பில் பட்ட கல் 15, 20 யாருக்கப்பால் இருந்து வந்து பட்டிருக்கும், முதல் தடவைநான் அந்தப் பாதையாற் போகும்போது அவ்விடத்தில் நின்ற கூட்டம் கலைந்து போய்விட்டது. இரண்டாவது முறைபோனபோது கல்எறிந்துவிட்டு ஓடினார்கள். ஆனால் நான் இறங்கித் துரத்தவில்லை. இந்தஇரு எதிரிகளையும் நான் அரை மணித்தியாலத்தால் சம்பவம் நடந்த இடத்தில் இருந்து அரை மைலுக்கப்பால் கைது செய்தேன்''

[க]

## 'வரட்சி நிவாரணம் வழங்குக'

(பச்சிலைப்பள்ளி)

பருவமழை குறைவினால் பாதிப்படைந்த, நெல்வயல்களுக்கு வரட்சி நிவாரணம் வழங்கும்படி, பளை பிரதேச அபிவிருத்தி சபை அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

பளை பிரதேச அபிவிருத்திச் சபைக் கூட்டம் அதன் தலைவர் திரு. மு. இ. செல்லத்துரை தலைமையில் நடைபெற்றபோது இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளிப் பகுதியில் இம்முறை பருவமழை குறைவினால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நெல்வயல்கள் பாதிப் படைந்துள்ளன.

(அ)

## பால விபத்து:

## 12 பேர் பலி 8பேர் காயம்

புதுடில்லி, பெப். 6

குஜராத்தில் புதிதாகக் கட்டப்பட்டுவந்த பாலம் உடைந்ததனால் 12 தொழிலாளர்கள் புதையுண்டு மாண்டனர். இச்சம்பவத்தில் காயமடைந்த 8 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## மயானத்..!

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

இடம் மாற்றுவதற்கு எதிர்ப்பு கிளம்பியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த எதிர்ப்பின் எதிரொலியாக சில உத்தியோகத்தர்களைத் தாக்கி சுவர்களில் சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

காப்புறுதிக்கு
எய்ற்கன் ஸ்பென்ஸ்

எமது யாழ்ப்பாண வாடிக்கையாளர்களின் வசதிக்காக . . .
ஸ்ரீலங்காவில் காப்புறுதித் துறையில் 100 வருடங்களுக்கு மேல் அனுபவமுடைய காப்புறுதித் தாபனமாகிய எய்ற்கன் ஸ்பென்ஸ் அன்ட் கம்பனி லிமிடட் தமது கிளை அலுவலகத்தை 190 ஆஸ்பத்திரி வீதியில் (ஓட்டோஸ் பில்டிங்) நிறுவியிருக்கிறார்கள்.

ஆயுள், வாகனம், தீ, கொள்ளை, தனிப்பட்டவிபத்து, கடல் அபாயம், சுகாதாரம், நானாவிதம் போன்ற சகல காப்புறுதி விடயங்களிலும் தனித்துவமான கவனத்துடன் உடனடிசேவையைப் பெற தயவு செய்து எமது கிளை அலுவலகத்திற்கு வருகை தரவும்.

எய்ற்கன் ஸ்பென்ஸ்
பாரம்பரிய சேவையுடைய ஒரே நிறுவனம்.

எய்ற்கன் ஸ்பென்ஸ் அன்ட் கம்பனீ லிமிட்டெட்

தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனப் பிரதான பிரதிநிதிகள்
315, வக்சோல் வீதி, கொழும்பு 2
தொலைபேசி: 24604-6 23399

# பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள்

(அரியாலை)

யாழ்ப்பாணம் பரி.யோவான் கல்லூரியின் முதலாம் பிரிவுக் கிரிக்கட் கோஷ்டியினர் இம் மாதம் 11ம், 12ம் திகதிகளில் மகாஜனக் கல்லூரியுடன், மகாஜனக் கல்லூரி மைதானத்திலும், 18ம், 19ம் திகதிகளில் யாழ்ப்பாணக் கல்லூரியுடன் பரி யோவான் கல்லூரி மைதானத்திலும், 25ம், 26ம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியுடன், ஹாட்லிக் கல்லூரி மைதானத்திலும், அடுத்த மாதம் 4ம், 5ம் திகதிகளில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியுடன் பரி. யோவான் கல்லூரி மைதானத்திலும், 11ம், 12ம் திகதிகளில் யாழ். இந்துக் கல்லூரியுடன் இந்துக் கல்லூரி மைதானத்திலும் மோதவிருக்கின்றன

யாழ். மத்திய கல்லூரிக்கும் பரி. யோவான் கல்லூரிக்குமிடையிலான இறுதிப்போட்டி பங்குனி மாதம் 18ம், 19ம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

பரி யோவான் கல்லூரிக் கோஷ்டியின் காப்டனாக செல்வன் ஆர். மகிந்தாவும், உப காப்டனாக செல்வன் பி. திருக்குமாரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கிரிக்கட்கோஷ்டியின் பயிற்சியாளராக திரு. கே. எஸ். ஈ. சேவியரும், விளையாட்டுச் செயலாளராக திரு. என். எஸ். தனபாலனும் பணிபுரிகின்றனர். (அ)

# காந்திச.ச.நிலையம் வெற்றி

(அரியாலை)

அரியாலை சரஸ்வதி மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டிக்கும் அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலைய விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையே காந்தி சனசமூக நிலைய வெள்ளி விழா விளையாட்டரங்கில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் காந்தி சன சமூக நிலையக் கோஷ்டி 2 - 1 புள்ளிகளால் வெற்றியீட்டியது,

முதலாவது ஆட்டத்தில் 15 – 5 என்ற புள்ளிகளால் வெற்றியீட்டிய காந்தி சன சமூக நிலையக் கோஷ்டி இரண்டாவது ஆட்டத்தில் 15 – 12 புள்ளிகளால் தோல்வியடைந்தது மூன்றாவது ஆட்டத்தில் 15 – 5 புள்ளிகளால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு மகேந்திரன் மத்தியஸ்தம் வகித்தார். இப்போட்டி பௌர்ணமி தினத்தை யொட்டி ஏற்பாடு செய்யப்பட்டது.

ஃ ஃ ஃ

நல்லூர் மூத்தவிநாயகர் விளையாட்டுக் கழகத்திற்கும் அரியாலை மேற்கு காந்தி சன சமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கும் இடையே காந்திநிலைய வெள்ளிவிழா அரங்கில் நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் காந்தி சன சமூக நிலைய விளையாட்டுக்கழகம் 15–5, 15 – 7 என்ற புள்ளிகளால் வெற்றி யீட்டியது.

# யாழ். உதைபந்தாட்ட லீக் நிர்வாகிகள்

(அரியாலை)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் வருடாந்தக்கூட்டம் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் லீக்கின் தலைவர் வைத்திய கலாநிதி ஜே. பி. சி. பிலிப்பின் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகள் தெரிவில் தலைவராக திரு. சற் சிங்கராயரும், உப தலைவர்களாக திருவாளர்கள் எஸ். எம். மார்ட்டின். எம். டி. தம்பிராசா' கே. ஜதுகுலசிங்கம், கே. கிருஷ்ணன், எஸ். ஏ. சத்தியாபிள்ளை ஆகியோரும் பொதுச் செயலாளராக திரு. பி. ஆர். தம்பிநாயகமும், உப செயலாளராக திரு. வ. திருஞானசம்பந்தரும், பொருளாளராக திரு ஏ. தேவராஜாவும், தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக சபை உறுப்பினர்களாகத் திருவாளர்கள் இ. கே. குமரையா, ஜி. ஆர். இராசசிங்கம், எஸ் கிலிபேட், எஸ். அந்தோனிப்பிள்ளை, எம். பேரின்பநாயகம், ஜே. இம்மனுவேல், எஸ். அமிர்தநாதர் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர். (அ)

வலி. தென்மேற்கு உதவி அரச அதிபர் பிரிவு:

# விளையாட்டுப் போட்டிகள் பெப். 12-ல் ஆரம்பம்

(பண்டத்தரிப்பு

விளையாட்டு அமைச்சின் ஆதரவில் வலிதென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெறும் வருடாந்த விளையாட்டுப்போட்டிகள் இம் மாதம் 12ம் திகதி தொடக்கம் ஆரம்பமாகவுள்ளன.

இம்முறை விளையாட்டு அமைச்சில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களே இப்போட்டியில் பங்குபற்றமுடியும் என்று வலிதென்மேற்கு விளையாட்டு உத்தியோகத்தர் திரு இ.சுப்பிரமணியம் தெரிவித்தார்

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் 23 வயதுக்குட்பட்ட ஆண்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டப்போட்டியும் 'எல்லே' போட்டியும் நடைபெறவுள்ளன

மகளிருக்கானவலைப்பந்தாட்டப்போட்டி மாதகல் சென். ஜோசவ் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும், கரப்பந்தாட்டப் போட்டிகள் (ஆண், பெண்) சண்டிலிப்பாய் இந்து மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

இதனைத் தொடர்ந்து வருடாந்த மெய்வல்லுநர்போட்டி மார்ச் மாதம் 20ம், 21ம் திகதிகளில் பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. இதற்கான ஒழுங்குகளை விளையாட்டு உத்தியோகத்தர் திரு. இ. சுப்பிரமணியம் செய்துவருகின்றார். (வெ)

# இன்றைய பலன்

தை மாதம் 25-ந் திகதி திங்கட்கிழமை (7—2—83)

மேடம்: முன்னேற்றப் பாதையில் தடைகள் உருவாகும், எதிரிகளின் சூழ்ச்சிகள் பலமாகவிருக்கும், உன் வீட்டிலேயே பூசல்கள் அதிகரிக்கும்.

இடபம்: கணவன் மனைவி உறவு அன்பாக இருக்கும், மற்றவர்களின் கவனத்தைத் திருப்புவதில் வெற்றியடைவீர்கள், காதல் சிட்டுக்களுக்கு கனிவானதினம்.

மிதுனம்: பிறர் நம்பிக்கையைத் தடுக்கவும், கடமையில் தடை ஏற்படும், சகோதரரால் பிரிவுத்துயர் வாட்டும், பிறர் எச்சரிக்கை கூடாது.

கடகம்: பெரியவர் ஆதரவு தப்பாமல் கிடைக்கும், வெள்ளம்போல் வாழ்வு மலரும், இனவரவிலும் திருப்தி ஏற்படும், கல்வி முன்னேற்றம் உண்டு

சிங்கம்: வாழ்க்கை இன்று தேனாக இனிக்கும், சகலதுறையிலும் நல்ல மாறுதல்கள் உருவாகும், பிரிந்தவர்கள் மீண்டும் இணைவார்கள், பெற்றோரின் உதவி உண்டு.

கன்னி: அன்னை வழிஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம், பொருள் வரவுக்கு இடமுண்டு, சிறப்பான தினம்.

துலாம்: வந்து சேரவேண்டிய பணத்தில் மீண்டும் தடையேற்படலாம், திரைமறைவில் சில சிக்கலுண்டு, ஒன்றை நினைத்தால் அது நடைமுறையில் வேறுவிதமாக மாறும்.

விருட்சிகம்: நாளென்றகும் பாவம் தலைதூக்கி நிற்கும். வேண்டியவர்களின் ஆலோசனையைக் கேட்காததால் பின்பு வருந்த நேரிடும், கவனம் வேண்டும்.

தனு: மனம் போல் வாழ்வு இன்றுமலரும், கடமையாற்றுமிடத்தில் பதவிஉயர்வு உண்டு, சகல தொழிலாளரின் ஒத்துழைப்புப் பெருகுவதற்கு இடமுண்டு.

மகரம்: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும், மறைமுகமாக நடத்திய காரியமொன்று இன்று அம்பலமாக மாறும், சிலருக்கு விரக்தி மனப்பான்மை தென்படும்.

கும்பம்: புதிய வாகனம் கொள்வனவு செய்வதில் சிலர் ஈடுபடுவார்கள், அறிவாற்றலை வளர்ப்பதற்கு ஆக்கபூர்வமான நம்பிக்கை உண்டு.

மீனம்; சிலர் வாழ்க்கையில் இன்று திருமணப் பேச்சும் இடம்பெறலாம், தங்கையின் முன்னேற்றம் குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

சோதிடக் கலாநிதி

திருமலை

க. வேலுப்பிள்ளை.

# இலட்சார்ச்சனை

[சுழிபுரம்]

பொன்னாலை ஸ்ரீவரதராசப் பெருமாள் தேவஸ்தான இலட்சார்ச்சனை இம்மாதம் 16ம் முதல் பத்துத்தினங்கள் நடைபெறவுள்ளது. தினமும் பகல் இரவு வேளைகளில் இலட்சார்ச்சனை நடைபெறும். பகல் அபிஷேக ஆராதனையுடன் இலட்சார்ச்சனையும் இரவு நியாசபூர்வ இலட்சார்ச்சனையும் நடைபெறும். மாசிமகத்தன்று சுவாமி தீர்த்தம் ஆடுவதற்கு திருவடிநிலை தீர்த்தக்கரைக்கு செல்வார். [மா]

# கிளிநொச்சி சாரணர் பயிற்சி

(கிளிநொச்சி)

இம்மாதம் 28ம் திகதி அனுராதபுரத்தில் நடைபெறவுள்ள சாரணர் மூன்றாவது தேசிய ஜம்போறியில் பங்குபற்றவுள்ள கிளிநொச்சித் தொகுதி மாணவர் சாரணர்களுக்கான பயிற்சி வகுப்பு ஒன்று வட்டக்கச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்றது. கிளிநொச்சி மாவட்ட சாரண உதவிஆணையாளர் திரு பொன் சபாபதி தலைமையில் நடைபெற்ற இப்பயிற்சி வகுப்பில் தேசிய ஜம்போறியில் கலந்துகொள்ளும் 35சாரணமாணவர்கள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர். கிளிநொச்சி மாவட்ட சாரணஆணையாளர் திரு. கே. கோபாலகிருஷ்ணனும் பயிற்சியின் போது பிரசன்னமாகி இருந்தார். (அ)

கட்டுவன்

# முதியவர்களுக்கு ஒய்வூதியம்

(மயிலிட்டி)

கட்டுவன் கிராமோதயசபை எல்லைக்குள் வசிக்கும் ஒய்வூதியப் பணம்பெறாத முதியவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுப்பதாக சமூக சேவை உத்தியோகத்தர் திரு. அ. இராமநாதன் உறுதியளித்தார்.

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. மகாதேவாவும் முதியோர்க்கு ஒய்வூதியம் வழங்க ஏற்பாடுகளைச்செய்யத் தயாராக இருப்பதாகச் சொன்னார்.

கட்டுவன் கிராமோதய சபைத் தலைவர் திரு. ந. கிருஷ்ணமூர்த்தி பேசுகையில் எமது முதியவர் பலர் இன்னும் வயோதிப ஒய்வூதியம் கிடைக்க ஆவன செய்யப்படவேண்டுமென விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கையிலேயே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். [மா]


வெள்ளி (மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
7-2-83 வரை
நீலமலர்கள்

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் – ராதிகா
கிழக்கே போகும் ரயில் (கலர்

றீகல் (யாழ். நகர்)
கடைசி சில தினங்கள்
எங்க வீட்டுப் பிள்ளை

சாந்தி (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள் - 6 — 8
FRED WILLIAMSON
THE SOUL OF NIGGER CHARLEY
SCOPE! COLOR! ACTION

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
நம் நாடு

யாழ். நகரில் இதுவே கடைசி சந்தர்ப்பம்
இன்னும் சில தினங்கள் மட்டும்
வின்ஸர் (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
"வசந்தமாளிகை"
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

ராஜா (யாழ்- நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
சிவாஜி - சாவித்திரி - தேவிகா- முத்துராமன் - என். டி. ராமராவ்
கர்ணன்
(ஈஸ்ட்மன் கலர்)
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி

ராணி (யாழ். நகர்) தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமராவ், ஜெமினி சாவித்திரி நடித்த
மாயா பஜார்

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
Body Heat
(Adults only)

லிடோ (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
பதினாறு வயதினிலே

மனோகரா (யாழ். நகர்) தினசரி 10-30, 2-15, 6-00, 9-45
ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ்
கே. மாலதி, எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி நடித்த
பாதாள பைரவி
மந்திரம் தந்திரம் மயிர்கூச்செறியும் பயங்கரச் சண்டைகள், காதல் காட்சிகளை வெண்திரையில் காணத்தவறாதீர்கள்.
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

# உயர் வகுப்புக்களை நடத்த கல்வி அமைச்சு அனுமதி

## 'நவம்' முயற்சி பலனளித்தது

(சுண்டிக்குளி)

கொடிகாமம் அரசினர் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் க. பொ. த. [உயர்தர] பரீட்சை வகுப்பு தொடர்ந்து நடைபெறுவதற்கு சாவகச்சேரி எம். பி. வி. என். நவரத்தினம் கல்வி அமைச்சின் செயலாளருடன் மேற்கொண்ட சந்திப்பு பலனளித்துள்ளது.

இவ்வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டு வந்த க.பொ.த [உயர்தர] பரீட்சை வகுப்புகளுக்குக்குறைந்தது 20 பிள்ளைகள் இருக்கவேண்டும் என்றும் விதிக்குக்குறைவாகப் பிள்ளைகள் கல்விகற்று வந்தமையினால் இவ்வகுப்புகளை ரத்துசெய்யுமாறு கல்வி அமைச்சு ஆணையிட்டதைத் தொடர்ந்து வித்தியாலய அபிவிருத்திசபை, பெற்றோர், ஆசிரியர்கள் சாவகச்சேரி எம். பி. யிடம் முறையீடு செய்தார்கள்.

இதனையடுத்து திரு. வி. என். நவரத்தினம் கடந்த வாரம் கல்வி அமைச்சின் செயலாளரைச் சந்தித்து, கொடிகாமம் அரசினர் திருநாவுக்கரசு வித்தியாலயம் வளர்ந்து வரும் ஒருபாடசாலையாகவும், 1982ல் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் மூன்றுபிள்ளைகள் சித்தியடைந்தமையையும், இவ்வகுப்பு 1980 ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டமையையும் சுட்டிக்காட்டினார். இவ்வித்தியாலயத்தை பொறுத்தவரையில் ஏனைய பாடசாலைகளுக்குவிதிக்கப்பட்டுள்ள க. பொ. த. உயர்வகுப்புகளுக்கான விதிகளிலிருந்து விலக்கு அளிக்குமாறும் எம். பி. கேட்டமையை அடுத்தே தொடர்ந்து வகுப்பை நடாத்த கல்வி அமைச்சு அனுமதிவழங்கியுள்ளது.

## இப்படியும் நடக்கிறது

பஸ் போக்குவரத்து சேவை, மினிபஸ் சேவையாகவும் பரவலாக்கப்பட்ட பின்னர் பலருக்கும் பல ரூபத்தில் வேலைவாய்ப்புகள் கிடைத்தன.

இதில் ஒன்று— மினிபஸ்களுக்கு பிரயாணிகளைச் சேர்த்துக்கொடுப்பது.

இவ்விஷயத்தில் தலைமன்னார் முந்திவிட்டதாகத்தெரிகிறது!

தலைமன்னார் துறைமுகத்திலிருந்து வெளியிடங்களுக்குச் செல்லும் சகல மினிபஸ்களுக்கும் பிரயாணிகளைச் சேர்த்துக்கொடுக்கும் வேலையை தலைமன்னார் கிராமோதயசபை ஆரம்பித்துள்ளது.

இவ்வைபவம் 'அப்படி இப்படி' என்று அங்குரார்ப்பணம் செய்யப்படவில்லை கிராமோதய சபைத்தலைவர் தேசியக்கொடியை ஏற்றிவைத்து மினி பஸ்களுக்கு பிரயாணிகளைச் சேர்த்துக்கொடுக்கும் திட்டத்தை ஆரம்பித்துவைத்திருக்கின்றார்!

இதனையும் ஒரு வகையான அபிவிருத்தித்திட்டம் என்று சொல்லலாமா?

— 'ஊடுருவி'

## நாட்டு மக்கள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ராகவும் தெரிவுசெய்துள்ளனர்

### "ஒத்துழைப்பு அளியுங்கள்"

"ஜனாதிபதியாகவுள்ளவர் நற்பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும். அவர் பிற்காலத்தில் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆராய்ந்து தீர்மானங்களை எடுக்கவேண்டும்.

"மக்கள் என்மீது வைத்துள்ள நம்பிக்கையைக் கொண்டு சேவையாற்றவுள்ளேன். இதற்காக நாட்டுமக்கள் அனைவரும் எனக்கு ஒத்துழைப்பை அளிக்கவேண்டும்" என்றார்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் பூவ்உரையைக் கேட்பதற்காக வரலாறு காணாதவகையில் பெரும் திரளான மக்கள் கண்டியில் குழுமியிருந்தனர். [வெ]

## ரூபா 1,70,00 செலவில் "நடராசா ஞாபகார்த்த திறந்த வெளியரங்கு"

(புலோலி)

பருத்தித்துறை நகரசபையின் நகர முன்னாள் தலைவர் அமரர் சட்டத்தரணி ந. நடராசாவின் 5வது ஞாபகார்த்த தினம் கடந்தவெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது.

இதனையொட்டி பருத்தித்துறை கொட்டடி சித்திவிநாயகராலயத்திலும் பருத்தித்துறை சென்தோமையார் புனிததேவாலயத்திலும் விசேட பூசைகளும் ஆராதனைகளும் இடம்பெற்றன.

அமரர் நடராசாவின் ஞாபகார்த்தமாக பருத்தித்துறை நகரசபையால் சுமார் 1,70,000 ரூபா செலவில் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் நடராசா ஞாபகார்த்த திறந்த வெளியரங்கு நிர்மாணிக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

இதற்கான நிதியை பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்திலிருந்து ஒதுக்கீடு செய்திருந்தார். (மா)

## துப்பாக்கியுடன் நடமாடிய...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தது. அத்துடன் அரைச்சாக்கு உருளைக்கிழங்கும் இருவரும் வைத்திருந்தனராம்.

இந்த இரு இளைஞர்களுடன் மேலும் ஒருவர் பார்சலுடன் நின்றதாகவும் அவர் தப்பியோடி விட்டதாகவும், அவர் வைத்திருந்த பார்சலில் துப்பாக்கி 'ரவை'கள் இருக்கலாம் எனவும் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

கோண்டாவில் மேற்கு விழிப்புக்குழு அமைக்கப்பட்டு ஒரு மாதத்துக்குள் அப்பகுதியில் நடைபெறவிருந்த இரு கொள்ளைச் சம்பவங்களைத் தவிர்த்துள்ளதாக அக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்தவாரம் இதே விழிப்புக்குழு ரோந்து சுற்றிக்கொண்டிருந்த பொழுது, வீட்டில் கொள்ளையடிக்க முயன்ற ஒருவரைப் பிடிக்க முயற்சித்த பொழுது, அவர் வந்த சைக்கிளையும் விட்டு தப்பி ஓடினாராம். பின்னர் சைக்கிள் சுன்னாகம் பொலிசில் ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த 3 இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று அதிகாலை கோண்டாவில் மேற்கு விழிப்புக்குழு செயலாளர் திரு. கே. சண்முகலிங்கம், அப்பகுதி கிராம சேவை அலுவலர் திரு. த. ஜெகதீஸ்வரன் ஆகியோர் தலைமையில் விழிப்புக்குழுவைச் சேர்ந்த இளைஞர்கள் ரோந்து சுற்றிக் கொண்டு வரும்பொழுது மேற்குறிப்பிட்ட இரு இளைஞர்களையும் பிடித்து தங்கள் காரியாலத்தில் வைத்திருந்தனர். பின்னர் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராஜலிங்கத்துக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து இரு இளைஞர்களையும் கைது செய்து கொண்டு வருமாறு பொலிசாருக்கு உத்தரவிட்டார்.

சப். இன்ஸ்பெக்டர் எஸ். சிவராசா, சார்ஜன்ட் எஸ். பாலசுப்பிரமணியம் தலைமையில் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள்கள் ரட்ணராஜா, செல்லத்துரை, பரமேஸ்வரன் ஆகியோர் அதிகாலை 3 மணிக்குச் சென்று இருவரையும் கைது செய்தனர்.

நேற்றுக் காலை இத்தகவல் கிடைத்ததும் உதவிப் பொலிஸ் அதிபர் ஜனப் மஜீத் உடனடியாக சுன்னாகம் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று இரு இளைஞர்களையும் விசாரணை செய்ததுடன் இவர்களைப் பிடித்து உதவிய கோண்டாவில் மேற்கு விழிப்புக் குழுவினரைப் பாராட்டினார்.

இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டது சம்பந்தமாக வடபகுதி பிரதி பொலிஸ் மா அதிபர் டி. பி. ராஜகுரு தலைமையில், பொலிஸ் அதிபர் எஸ். ரி. ஆனந்தராசா, உதவிப் பொலிஸ் அதிபர் ஜனப் மஜீத் ஆகியோரைக் கொண்ட உயர் மட்ட மகாநாடொன்று நடைபெற்றது.

இரு இளைஞர்களும் வைத்திருந்ததாகக் கருதப்படும் 'ஷொட்கன்' எப்படி இவர்களுக்குக் கிடைத்தது என்பது பற்றி பொலிசார் ஆராய்ந்து வருவதுடன், அண்மைக்காலங்களில் வடபகுதியில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கும் இவர்களுக்கும் தொடர்பிருக்குமா? எனச் சந்தேகிக்கின்றனர். இவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் விசாரணை செய்யப்படவுள்ளனர். (மா)

## பஸ் விபத்து

[1ம் பக்கத் தொடர்ச்சி]

அனுராதபுரத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பஸ்ஸும், யாழ்ப்பாணத்திலிருந்துகொடிகாமம் சென்ற பஸ்ஸுமே விபத்துக்குள்ளானது.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பஸ்ஸுக்கே அதிக சேதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன் சாரதியான ஏ. யோகலிங்கம் படுகாயமுற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். மற்றும் பஸ்களுக்குள்ளான 25 பேரில் பெண்கள் உட்பட 15 பேர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெறுகின்றனர்.

யாழ். பொலிசார் விசாரணை செய்துவருகின்றனர். [மா]

## பல்கலைக்கழக

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டுள்ளதாகவும் பேராசிரியர் சொன்னார்.

### கொழும்பில் ஆலோசனை

இதற்குப் பதிலளித்துப் பேசிய மாணவர் அவைத்தலைவர் திரு. ஸ்ரீஸ்கந்தராசா, "உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் மாணவர்களின் நிலைமை குறித்து அனைத்து இலங்கை பல்கலைக்கழக மாணவர் அவை உறுப்பினர்கள் கொழும்பில் ஆலோசிப்பதாகவும், அந்த ஆலோசனைக் கூட்டத்துக்கு யாழ். பல்கலைக்கழக மாணவர் அவைப்பிரதிநிதி ஒருவரும் சென்றுள்ளதால் அவர்களின் முடிவுகளை தாம் எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

### இன்று முடிவு

யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை இன்று திங்கட்கிழமைகூடி ஒரு முடிவுக்கு வருவதாகவும் தெரிவித்தார்.

இதனைத்தொடர்ந்து நேற்றுக்காலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த யாழ். பல்கலைக்கழக வேந்தர் திரு. மாணிக்கவாசகர் நிலைமைகளை அறிந்துகொண்டு உடனே கொழும்பு திரும்பினார்.

நேற்றுப் பிற்பகல் யாழ். பல்கலைக்கழக மாணவர் அவை தலைவர் திரு ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் கூடி, 'உண்ணாவிரதப்போராட்டம்', 'வேந்தர், உபவேந்தர் பேச்சுவார்த்தை' குறித்து நீண்ட நேரம் ஆலோசனை நடாத்தியது. அத்துடன் கொழும்பில் இதுசம்பந்தமாக நடைபெற்றுக்கொண்டிருந்த அனைத்துப்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியக் கூட்டத்தின்முடிவை எதிர்பார்த்த போதிலும் இச்செய்தி எழுதும் வரை தங்களுக்கு எதுவித பதிலும் வரவில்லை என்று தலைவர் தெரிவித்தார் இதனைத்தொடர்ந்து மாணவர் அவைக் கூட்டம் இன்று ஒத்திவைக்கப்பட்டது.

### இன்று 2வது கட்டம் முடிவு

இன்று மாலையுடன் இரண்டாவது கட்டமாக மேற்கொண்ட நான்குநாள் உண்ணாவிரதப்போட்டம் முடிவுறுகிறது. இன்று நடைபெறும் உண்ணாவிரதத்தில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி தொழில் நுட்ப நிறுவன மாணவர்களும் கலந்துகொள்ளவுள்ளார்கள்.

## மாணவி மயக்கமடைந்தார்

உண்ணாவிரதம்இருந்துவந்த மாணவி ஒருவர் நேற்றுக்காலை மயக்கமடைந்திருந்தால், உடனடியாக அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஒரு மணித்தியாலத்தின் பின்னர் அவர் உண்ணாவிரதத்தில் கலந்துகொண்டார். மற்றும்சில மாணவர்களும் சோர்வடைந்த நிலையில் காணப்பட்டனர்.

கடந்த முதலாம் திகதி தொடக்கம் நான்கு நாட்களுக்கு 1ம் கட்டமாக 50மாணவர்களும், அவர்களைத் தொடர்ந்து 50 மாணவர்கள் 2ம் கட்டமாக நான்கு நாட்களும் உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். 2வது கட்டமாகத்தொடங்கிய உண்ணாவிரதம் இன்று பிற்பகல் 4 மணிக்கு முடிவடைகின்றது. அடுத்த 3வது கட்டம் இன்று பிற்பகல்தொடங்குமா என்பது குறித்து இன்று முடிவுதெரியும் [மா]

## கிரிக்கெட் இலங்கை தோல்வி

ஆவுஸ்திரேலியா, பெப். 6

அவுஸ்திரேலியாசென்றுள்ள இலங்கை கிரிக்கெட் கோஷ்டி முதல் போட்டியில், ஒருநாள் ஆட்டத்தில் விக்ரோறியா கோஷ்டியிடம், தோல்வியடைந்தது.

## கபில்தேவ் காப்டன்

புதுடில்லி, பெப். 6

மேற்கிந்தியாவிற்குச் செல்லவுள்ள இந்திய கிரிக்கெட் கோஷ்டிக்கு காப்டனாக கபில்தேவ் நியமிக்கப்பட்டுள்ளார். உதவி காப்டனாக கிர்மாணி நியமிக்கப்பட்டுள்ளார்.


# ஹோம் பிறுன்ஸ் லிமிட்

யாழ். புடவை வியாபாரிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட், 82, கன்னதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறுன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடை ஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்கு உண்டு.

I. சாயமூட்டிய பொப்பிளின்
II. வெள்ளை பொப்பிளின்
III. பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்

82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (போன்: 24310)

தலைமைக் காரியாலயம்

ஹோம் பிறுன்ஸ் லிமிட்
463, காலி வீதி, கொழும்பு-3


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் [illegible] 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Eelanadu - P. O. Box: 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126]